★ கூறைகள்
★ காஞ்சிபுரம்
★ பட்டு வேட்டி
★ பிளவுஸ் வகைகள்
மற்றும்
சுபமுகூர்த்த புடவைகளை
சுலபமே தெரிவுசெய்ய
சோபனா
ரெக்ஸ்ரைல்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

இன்றைய அறிமுகம்
நாளைய நாகரீகம்
இறக்குமதி செய்யப்பட்ட
சாறிகள்,
றெடிமேட் ஆடைகளை
நவீன டிசைன்களில்
மனம் போல்
பெற்றுக்கொள்ள
சோபனா
ரெக்ஸ்ரைல்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

சுடர் 5: பிரமோதூத ஞு வைகாசி மீ 02 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால்பிறை 20 (16-05 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 87

## பார்சல்களை ஏற்க இன்னும் அனுமதி இல்லை

யாழ்ப்பாணம், மே 16

யாழ். தபால் அலுவலகத்தில் பார்சல்களை ஏற்றுக் கொள்வதற்கு கொழும்பு மத்திய தபால் அலுவலகம் தொடர்ந்தும் அனுமதி மறுத்து வருகிறது.

இதேவேளை கொழும்பில் இருந்து வடபகுதிக்கானபார்சல்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டு வருகின்றன. (இ 10)

## இதுவரை 60 பேர் அபராதம் செலுத்தினர்

யாழ்ப்பாணம் மே 16

யாழ். மாநகரசபைப் பகுதியில்கடந்த மூன்றுமாதங்களில் அறுபதுக்கும் மேற்பட்டோர் சட்ட விரோத மின்பாவனையில் ஈடுபட்டு தண்டப் பணம் செலுத்தியுள்ளனர்.

யாழ். மாநகரசபைப் பகுதி மின்சார சபை உத்தியோகத்தர்கள்வாரம்தோறும்திடீர்பரிசோதனைகளை நடத்தி வருகிறார்கள். எனினும் தற்பொழுதுசட்டவிரோதமின்பாவனை அதிகரித்த அளவில் இல்லை என்றும் மாநகரசபைப் பகுதி உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (10)

## ஜனசக்தி: செயலகத்தில் இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், மே 16

ஜனசக்தித் திட்டம் அமுல் செய்யப்பட்ட பின்னர் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகுறித்து ஆராய இன்று புதன்கிழமை யாழ். செயலகத்தில் கூட்டம் ஒன்று நடைபெறஇருக்கிறது.

அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் வங்கி அதிகாரிகளும், இத்திட்டத்துக்குப் பொறுப்பான அதிகாரிகளும் கலந்து கொள்வார்கள். (ஓ-3)

## யாழ். வந்த செஞ்சிலுவை தலைவர்

யாழ்ப்பாணம், மே 16

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க இலங்கைக் குழுத் தலைவர் திரு. பிலிப்ஸ் கொமட் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இந்தச் சங்கத்தின் அலுவலகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் அமைப்பதுதொடர்பான வேலைகளை அவர் மேற்பார்வை செய்தார். (ஓ-3)

## சூரியகுமாரன் யாழ். நகரில்

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள சரணடைவு ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரியர் சூரியகுமாரன் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இவர் அரச அதிபர் உட்பட பலரைச் சந்தித்தார். குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் அவர் விஜயம் செய்தார். (ஓ-3)

## ஏப்ரலில் இருந்து புதிய மின் கட்டணம்

யாழ் மாநகரசபை புதிய மின் கட்டணங்களை ஏப்ரல் மாதத்தில் இருந்து பாவனையாளர்களிடம் வசூலிக்கும்.

இதற்கான அங்கீகாரத்தை இலங்கை மின்சாரசபை மாநகரசபைக்கு வழங்கியுள்ளது.

இதேவேளை பாவனையாளர்கள் 50 யுனிட்டுக்குள் தமது மின்பாவனையை கட்டுப்படுத்திக் கொண்டால் அதிகரிக்கப்பட்ட மின் கட்டணத்துக்கும் பழைய மின்கட்டணத்துக்கும் இடையிலான வேறுபாடுகள் குறைவாகவே இருக்கும் என்று மாநகரசபை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். [இ-10]

# ஈ.பி.ஆர்.எல்.எவ். - அரசு பேச்சுக்கு புலிகள் ஆட்சேபம்

## மக்கள் முன்னணி அறிக்கை

யாழ்ப்பாணம், மே 16

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நேற்று கொழும்பில் ஆரம்பமான பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கடும் ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது.

இது தொடர்பாக முன்னணியின் தலைமைச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இந்த ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கையின் விவரம் வருமாறு:-

இந்தப்பேச்சுவார்த்தைகள் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் வெறுப்பையும், சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

இந்திய ஆக்கிரமிப்புக்கு எமது மண் உட்பட்டிருந்த காலகட்டத்தில் ஈ பி. ஆர். எல்,எவ்வினர் புரிந்த கொலைகள், கொள்ளைகள், ஆட்கடத்தல், போன்ற மக்கள் விரோதச் செயல்களின் விளைவாக அவர்கள் மீது மக்கள் கொண்ட வெறுப்பும் கோபமும் உலகமறிந்த விடயம்,

இந்த நிலையில் மக்கள் விரோத சக்திகளான ஈ. பி. ஆர். எல்.எவ்வுடன் ஸ்ரீலங்கா அரசு பேசிக்கொண்டிருப்பது எமது மக்களுக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் எதிர்காலம் தொடர்பான ஒரு நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தியப் படைகள் எமது மண்ணை ஆக்கிரமித்திருந்த காலகட்டத்தில் இத்தீவின் அனைத்து மக்களுமே (சிங்கள மக்கள் உட்பட) ஒன்று திரண்டு இந்தியப்படை வெளியேற வேண்டும் எனக் குரல் கொடுத்தார்கள்.

ஆனால் இந்தியப்படை வெளியேறுவதைத் தடுப்பதற்காக ஈ.பி ஆர் எல்.எவ்வினர் பல சூழ்ச்சிகர நடவடிக்கை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பெ. வெங்காயம் கிலோ 18.50

கொழும்பு, மே 16

கூட்டுறவு மொத்தவிற்பனை ஸ்தாபனம் ஆயிரத்து 250 மெட்ரிக் தொன் பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்துள்ளது.

சில்லறை விற்பனை நிலையங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் என்பவை மூலமாக இது பாவனையாளர்களுக்கு விநியோகிக்கப்படும். கூட்டுறவுச் சங்கங்கள் தேவையான அளவை மொத்த விற்பனை தாபனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது.

போதியளவு பெரிய வெங்காயம் கையிருப்பில் உள்ளதாகவும் சில்லறை விற்பனை விலை கிலோவுக்கு 18 ரூபா 50 சதம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-ப]

# ஈழபிரகடனம்: மீளபரிசீலிக்க ஈ.பி.ஆர்.எல்.எவ்.இணக்கம்

## அரசுப் பிரதிநிதிகளிடம் எடுத்துரைப்பு

— உதயன் கொழும்புச் செய்தியாளர் —

கொழும்பு, மே 16

ஐக்கிய இலங்கைக்குள் தமிழர் பிரச்சினை தீர்க்கப்படும் பட்சத்தில் தமது தமிழீழப் பிரகடனத்தை மறு பரிசிலனை செய்வதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஈ. பி. ஆர். எல். எவ். அரசாங்கத்திடம் இணக்கம் தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும், ஈ. பி. ஆர். எல். எவ். தூதுக் குழுவினருக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையின் போது இந்த இணக்கம் காணப்பட்டதாக இரு பகுதியினரும் இணைந்து விடுத்த கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட ஈ, பி. ஆர். எல். எவ். தூதுக்குழுவுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

★ வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சட்டம் - ஒழுங்கு.

★ மாகாண நிர்வாகம்.

★ ஜனநாயக வழியில் அமைதியையும், சமாதானத்தையும் நிலைநாட்டுதல் ஆகிய மூன்று அம்சங்கள் குறித்தே பேச்சுக்கள் நடைபெற்றன. இந்த விடயங்களுக்கு பூரண ஒத்துழைப்புத் தருவதாக ஈ. பி. ஆர். எல். எவ். உறுதியளித்துள்ளது.

★ தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட்டால் 1991 ஆம் ஆண்டுக்கு பிரகடனம் செய்த ஈழக் குடியரசை மறு பரிசீலனை செய்வதாக அந்த அமைப்புத் தெரிவித்தது

★ ஈ. பி.ஆர்.எல்.எவ்.வின்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



பார்லிமென்டில நேற்று வலு சூடாய் விவாதம் நடந்திருக்குஎண்டுசொல்லுங்கோ.

## 6 வார சிசுவுக்கு இருதய அறுவை சிகிச்சை

புதுடில்லியில் அகில பாரத மருத்துவ அறிவியல் சழக மருத்துவர்கள் ஆறுவாரக் குழந்தைக்கு இருதய நுரையீரல் அறுவைச் சிகிச்சை ஒன்றைச் செய்துள்ளனர்.

இக்குழந்தையின் இருதயத்தின இருதெ மிற்பாட்டு அங்கங்கள் இடம் மாறிஇருந்தன. இதனால்உடலு அசுத்த இரத்தம்ஓ த்தொடங்கியது. மேலும் இக்குழந்தையின் இருதயத்தில் துளை இருந்ததால் சுத்த, அசுத்த இரத்தங்கள் ஒன்றாகக் கலந்துவிட்டன.

இந்தப் பிரச்சினைகளால் குழந்தையின் உடல் நிலை மேலும் சிக்கலானது.

டாக்டர் ஐ. எம். ராவி, டாக்டர் கே எஸ் ஐயர் ஆகியோர் 7 மணி நேர அறுவைச் சிகிச்சைக்குப் பின் இருதயத் துவாளையை அடைத்து இடம் மாறி இருந்த பகுதிகளையும் சரியாகப் பொருத்தினர். [ஒ-ப]

# நாடாளுமன்றத்தில் நேற்று புலிகள் பற்றி பெரும் சர்ச்சை

## சபையில் காரசாரமான வாக்குவாதமும் கூச்சலும்

கொழும்பு, மே 16

நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது விடுதலைப்புலிகள் பற்றிய சுதந்திரக்கட்சி எம். பியின் கேள்விக்குப் பாதுகாப்பு துணை அமைச்சர் பதில் அளித்த போது பெரும் கூச்சலும் கேள்விக்கணைகளும் வாக்குவாதங்களும் இடம்பெற்றன

சபாநாயகர் பெரும் சிரமப்பட்டு அமைதியை நிலைநாட்டினார்.

சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த திரு. நிமால் சிறிபால டி. சில்வா தெரிவித்ததாவது:

இந்தியப்படை வெளியேறியபின் பொலீஸ் - இராணுவம் வடக்கு கிழக்கில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும்என்று அரசுதெரிவித்தது. வடக்கு-கிழக்குநிர்வாகம் மத்திய அரசிடமிருந்து விடுதலைப்புலிகளின்கீழ் வருவதைக் காணமுடிகிறது.

பொலீஸாரும் இராணுவத்தினரும் வெளியே வரமுடியாது முகாமில் முடங்கிக் கிடக்கிறார்கள். வெளியே போவதாயிருந்தால் விடுதலைப் புலிகளின் பாதுகாப்புடனேயே போகவேண்டியுள்ளது.

நீதிமன்ற நிர்வாகத்தை இயங்கவிடாமல்செய்து, புலி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுப நேரம்

16 - 5 - 90

புதன்கிழமை வைகாசி 02

சுபநேரம் ;

4.23 - 5. 53

இராகுகாலம்

11.53 - 01.23

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

# புலிகளுடன் போராட சு.க. வினர் தயாரா?

## சபையில் ரஞ்சன் கேள்வி

கொழும்பு, மே. 16

''ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி புலிகளுடன் போராட விரும்பினால் பகிரங்கமாக முன்வரலாம்''

— இவ்வாறு பாதுகாப்பு துணை அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்ன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. நிமால் சிறிபால டி. சில்வா கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:-

சுதந்திரக்கட்சியினர் இரு விடயங்கள் பற்றியே பேசுகிறார்கள் ஒன்று வாழ்க்கைச் செலவு உயர்வு, மற்றையது புலிகள் பற்றியது.

வேறு விடயங்கள் பற்றி அவர்களுக்குத் தெரியாது.

புலிகளுக்கும் - அரசுக்கும் இடையில் இரகசிய ஒப்பந்தம் எதுவுமில்லை.

புலிகளை கட்டுப்படுத்தி அவர்களுடன் பேசி, விட்டுக் கொடுத்து ஒருமைப்பாட்டுக்கு வரவே நாம் விரும்புகிறோம்.

எம்மைப்பொறுத்தவரையில் புலிகளுக்கு விட்டுக் கொடுப்போம், ஒருமைப்பாட்டுக்கு வருவோம். அதுவே

(5 ஆம் பக்கம் பார்க்க)

# நேற்றைய பேச்சுக்களில் ஹமீத் பங்குபற்றவில்லை!

அரசுக்கும் - ஈ. பி. ஆர். எல் எவ் வினருக்கும் இடையில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் நீதி அமைச்சர் ஜனாப் ஏ. ஸி எஸ் ஹமீத் கலந்து கொள்ளவில்லை.

அரச தரப்பில் வடக்கு, கிழக்கு சமாதானக் குழுத் தலைவரான ஜனாப் ஹமீக் பங்குபற்றுவர் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தங்களுடன் முக்கிய பேச்சுக்களை நடத்தி வரும் ஹமீத். ஈ. பி. ஆர். எல். எவ்வுடனும் பேசுவதை விடுதலைப் புலிகள் கடுமையாக ஆட்சேபித்தனர் என்றும்-

அதன் காரணமாக இந்தப் பேச்சுக்களில்அமைச்சர்ஹமீத் பங்குபற்றமாட்டார் என்றும் ''உதயனில்'' செய்தி வெளியாகியிருந்தது தெரிந்ததே.

சுகயீனம் காரணமாகவே அமைச்சர் ஹமீத் நேற்றைய பேச்சுக்களில் பங்குபற்றவில்லை என ஈ.பி.ஆர்.எல். எவ். எம். பியான திரு. கே. யோகசங்கரி நேற்றுத் தெரிவித்தார்

ஆனால் அமைச்சர் ஹமீத் நேற்று முன்தினம் லண்டனிலிருந்து திரும்பிய கையோடு கொழும்பில் நடைபெற்ற சர்வகட்சிகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் பங்குபற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-ஒ-2-3]

## ஈ.பி.ஆர்.எல்.எவ் தரப்பில் பிரமுகர்கள் திருப்தி

கொழும்பு, மே 16

அரசு- ஈ. பி. ஆர். எல்.எவ் பேச்சுவார்த்தை நல்லமுறையில் அமைந்ததாக ஈ.பி. ஆர். எல். எவ். பிரமுகர்கள் உதயனுக்குத் தெரிவித்தார்கள்

பேச்சுவார்த்தைகளை அடுத்து தூதுக் குழுவுக்குத் தலைமை வகித்த நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே. பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவித்ததாவது :-

எமது 19 அம்சக் கோரிக்கைகளை அமைச்சரிடம் சமர்ப்பித்தோம். மாகாண சபை சம்பந்தமாகவோ, ஆறாவது சட்டத் திருத்தம் குறித்தோ நாம் பேசவில்லை- என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வி யோகசங்கரி கருத்து வெளியிடுகையில் உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

முதற்கட்டவையாகப் பேசியதால் நிறைய விடயங்கள் குறித்துப் பேச முடியவில்லை

(5 ஆம் பக்கம் பார்க்க)

## பிறப்புச் சான்றிதழ் வழங்க புத்தகங்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், மே 16

54 ஆம் ஆண்டுக்குப் பின் பிறந்தவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ்கள் வழங்க 20 புத்தகங்கள் நேற்று செயலகம் வந்து சேர்ந்தன மேலும் 20 புத்தகங்கள் இவ்வாரத்தில் வந்து சேரவுள்ளன.

கடந்த சில வாரங்களாக இவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்கப் புத்தகங்கள் இன்மையால் வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன

செயலகத்தில் தேங்கிக் கிடக்கும் 25 ஆயிரம் விண்ணப்பங்களில் 70 சத வீதமானவை 54 ஆம் ஆண்டுக்குப் பின் பிறந்தவர்களுடையவையே என்று அந்தப்பிரிவு அதிகாரி தெரிவித்தார்.

தினமும் 200 விண்ணப்பங்களுக்கு சான்றிதழ்கள் தபாலில் அனுப்பப்படுவதாகவும் அதே நேரம் தினமும் 400 க்கு மேல் விண்ணப்பங்கள் வந்து கிடைப்பதாலேயே தேக்கம் அடையும் நிலை உருவாவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ - 3)

## பாடசாலையில் முகாமிட்டிருந்த கொக்கிளாய் ராணுவம் இன்னும் வெளியேறவில்லை

### அப்பகுதி மக்கள் வெளியேற்றம்

கொக்குளாய் பாடசாலையில்முகாமிட்டிருந்த இலங்கை இராணுவத்தினர் அங்கிருந்து இன்னும் வெளியேறவில்லை

அதனால் பாடசாலைக்கு அருகே குடியிருந்த மக்கள் அச்சம் காரணமாக மீண்டும் முல்லைத்தீவுக்கு திரும்பிச் சென்றுள்ளனர்

கடந்த 10 ஆம் திகதியுடன் இந்த முகாம் மூடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-11-92)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஜேர்மன் இனம் அல்லேஷன் நாய்க்குட்டி 1½ மாதக் குட்டி விற்பனைக்கு உண்டு R. S. K. Fram Murugapathi Uduvil மான்ஸ் பள்ளிக்கூடம் அருகாமையில். (3469)

தமிழ் தட்டெழுத்து இயந்திரம் (Typewriter) றெமிங்டன் விற்பனைக்குண்டு. ராஜா டூர்ஸ், 168/1 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். (3471)

பூரண விளைதிறனுடைய பம்பாய் வெங்காய விதை (புதிய இறக்குமதி) விற்பனைக்குண்டு. பிள்ளையார், 259. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3451)

நல்ல இன பம்பாய் வெங்காய விதை விற்பனைக்கு உண்டு. சிவஜங்கரன், விவசாய விற்பனை நிலையம், அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. (3467)

### திருமண அழைப்பு கார்ட்டுகள்

புதிய அச்சடிக்கும் திருமணக்காட்டுகள் சகலடிஸைன்களிலும் விற்பனையாகிறது. உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ப, ஸ்ரீகாந்த்- புத்தகசாலை மின்சாரநிலைய வீதி. பஸ் நிலைய முன்புறம், யாழ்ப்பாணம். (C/5033)

### கோழிக்குஞ்சு விநியோகம்

ஒரு மாத Hyline வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 16-05-90 புதன் கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராசா & பிறதர்ஸ், பிரம்படிலேன், கொக்குவில். (3449)

### காணி விற்பனைக்கு

நீர்வேலி பன்னாலையில் 15 பரப்பு மேட்டு நிலக் காணி விற்பனைக்கு உண்டு. வீடு, தொழிற்சாலை, பண்ணை அமைப்பதற்கு உகந்த இடம். பிரித்தும் கொடுக்கப்படும். நீர்வேலிச் சந்தியில் இருந்து சுமார் 100 யார் தூரம் கிழக்கே. தொடர்பு:பரமசாமி,நீர்வேலி மத்தி. நீர்வேலி. (3462)

### தேவை

அச்சக வேலைகள் பயில்வதற்குபடித்த 20 வயதிற்குட்பட்ட ஆண்கள் தேவை. யாழ். மாநகரசபைக்கு அண்மையில் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும் கு.வி. அச்சகம் 386, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (3468)

கற்பூரத் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. முன் அனுபவம் இருப்பின் விரும்பத்தக்கது. ஜெற் இன்டஸ்றீஸ், (கற்பகம் பிள்ளையார் கோவிலடி) விதானையார்வீதி, கோப்பாய்தெற்கு. (3460)

### மணமகள் தேவை

லண்டனில் நிரந்தர குடியுரிமை, அரசாங்க உத்தியோகம், உயர்ந்த சம்பளம், சொந்தவீடு. வாகன வசதிகளுடன் வாழும் 39 வயது, உயரம் 5' 4'' உடைய கத்தோலிக்சகுருகுல வாலிபருக்கு அவர் சகோதரர் ஆங்கில அறிவுடைய தகுந்த மணமகளை தேடுகின்றார். விரும்புவோர் முதற்கடிதத்தில் சீதனம் போன்ற முழுவிபரங்களுடன் கடிதம் மூலம் தொடர்புகொள்ளவும் இல 696, C/o உதயன் (3472)

கனடாவில நிரந்தரமாக வசிப்பவரும், வியாபாரம் செய்தவரும் வேளாள கத்தோலிக்க இரு பிள்ளைகளின் தந்தையும் 42 வயதுடைய ஒருவருக்கு கல்யாணமாகாத அல்லதுவிதவையான ஏறக்குறைய 35 வயதுடைய கத்தோலிக்க அல்லது இந்து வேளாள குல மணமகள் தேவை. கனடா செல்ல வேண்டும். விபரங்களுடன் 22- 05- 90க்கு முனபாக விண்ணப்பிக்கவும். C/o உதயன் 123. [13082]

### தொழில் கல்வி

Radio Officers (Ship) P.M.6. Telex Operators (International) இருபாலாரும் Airconditioning And Refrigeration, Electronics. வெளிநாடுகளில் பிரபல்யமானவை. சான்றிதழ் வழங்கப்படும். ஆரம்பம் 2-6-90 Nesta Technical Institute 59. Station Road, Jaffna. (13092)

### தொலைந்து விட்டது

மீசாலையைச் சேர்ந்த சி.பா மகேந்திரனுக்கு சொந்தமான தேசிய. புகையிரதச் சேவை அடையாள அட்டை. புகையிரத போக்குவரத்துச் சேவை பாஸ் (Duty Pass) என்பன Purse உடன் கடந்த 6 ஆம் திகதி யாழ்/ மீசாலைக்கு இடையில் தொலைந்து விட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து Maxaal House, 20, Jubilee Bazar, Jaffna இல் கொடுக்கவும். (3470)

### A/L விலங்கியல்

புதிய உயர்தர விலங்கியல் பகுதி II கரப்பான், தேரை விளக்கப் படங்களுடன் உள்ளடக்கிய அரிய நூல். ஆசிரியர் K. சங்கரஐயர், BSc. வெளியீடு. விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் (சி/4495)

### தையல் பயிற்சி

நெடுங்கேணி மே 16

நெடுங்கேணி தெற்குகிராம சேவையாளர் பிரிவில் வேலையற்ற யுவதிகளுக்கு தையல் பயிற்சி வகுப்பொன்று விரைவில் நடத்தப்படவிருப்பதாக கிராம சேவகர் திரு ஆர். கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார். (க-108)

### கல்விச் செயலகம்

சாவகச்சேரி மே 16

தென்மராட்சி கோட்டக் கல்விச் செயலகம் இம்மாதம் ஆரம்பிக்கும். (ப - 31)

### ஒலிப்பதிவுநாடா

கைதடி மே 16

அன்னை பூபதியின் தியாக கீதங்கள் ஒலிப்பதிவு நாடா தமிழீழ விடுதலைப் புலிகளின் தென்மராட்சிப் பிரதேச காரியாலயத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

மட்டக்களப்பு பாடுமீன் கலைமன்றத்தினால் ஒலிப்பதிவு செய்யப்பட்ட இந்த ஒலிப்பதிவு நாடாவின் விலை 70 ரூபாவாகும். [74]

## ஆங்கிலத் தட்டெழுத்தாளர் தேவை

சிறந்த ஆங்கில அறிவும், அனுபவமும் உள்ள பெண் தட்டெழுத்தாளர் தேவை. 22 - 05 - 1990 செவ்வாய்க்கிழமை காலை 9. 00 மணிக்கு சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும். ''கிளீன் கட்'' இல 239, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

[3573]

## இயேசு ஜீவிக்கிறார்

**5 அற்புதமாலைகள் 5**

இடம்: மானிப்பாய், செல்லமுத்து விளையாட்டு மைதானம்
திகதி: 16- 05- 1990 — 20- 05- 1990
புதன் முதல் — ஞாயிறு முடிய
நேரம்: தினமும் மாலை 4. 00 மணிக்கு

**நற்செய்தி: செ. ராஜேந்திரம்**

வியாதியா? சமாதானமில்லையா?
பிசாசின் பிடியா? என்ன பிரச்சினை?
இயேசு இலவச ஆன்மீக விடுதலை தருகிறார்.
வியாதியஸ்தருக்காக ஜெபம் செய்யப்படும்.
எல்லோரையும் அன்பாய் வரவேற்கிறோம்.

(3548)

## தேவை

பின்வரும் பதவிகளுக்கு ஆண்கள் மட்டுமே தேவை.

1. இயந்திர இயக்குநர்
2. அச்சுக் கோப்பாளர்
3. பைண்டர்ஸ் [Binders]

அத்துடன் மேற்படி பதவிகளுக்கான பயிலுநர்களும் தேவைப்படுகின்றனர். எனவே சேரவிரும்புவோர் கல்வி, நற்சாட்சிப் பத்திர மூலப்பிரதிகளுடன் நேரில் வரவும்-

முகாமையாளர்,
உதயன்
15. 2 ஆவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-4519]

## கம்பியூட்டர் கல்வி

✶ Diploma in Data processing and Computer Programming in BASIC Language

ஆரம்பம்:- 19 th - May 1990
(சனி, ஞாயிறு வகுப்புகள்) நேரம்:- 1 30 p m

ஆரம்பம்:- 25 th - May 1990
(திங்கள், புதன் வெள்ளி வகுப்புகள்)
நேரம்:- 1. 30 p. m

LOTUS 1- 2- 3

ஆரம்பம்:- 19 th May 1990
(சனி, ஞாயிறு வகுப்புகள்)

O/L படித்த இரு பாலாரும் சேரலாம். மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.




**UNIKCO COMPUTER CENTRE**

No. 5, Power House Road, 2nd Lane, JAFFNA

## கேள்வி அறிவித்தல்

**வட-கிழக்கு மாகாண அரசு கட்டடங்கள் திணைக்களம்**

ஏற்கனவே 01 - 05 - 90 இல் பிரசுரிக்கப்பட்ட கிளிநொச்சி வைத்திய அதிகாரி அலுவலகம் அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் பெறப்படும் திகதியும், பூரணப்படுத்தப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதியும் இத்தால் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது.

கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும் கடைசித் திகதி 23 - 05 - 90 நிறைவேற்று எந்திரி பணிமனை, கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். புதிய கடைசித் திகதி 30 - 05 - 90. கட்டடங்கள் திணைக்களம், உள்துறைமுக வீதி, திருகோணமலை.

பணிப்பாளர்,
கட்டடங்கள் திணைக்களம்,
திருகோணமலை.

[சி/5032]

**வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோவில்**
**(பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோவில்)**

## அறிவித்தல்

மேற்படி கோவில் நிதிக்கென ஓர் இசை நிகழ்ச்சி நடத்துவதாகச் சிலர் டிக்கற்றுக்கள் விற்றுத்திரிவதாக அறிகிறோம். இக் கோவிலிற்காக நாங்கள் ஒரு நிதியும் திரட்டவில்லையென்றும், அப்படி யாராவது திரட்டுவதை அனுமதிக்கவில்லையென்றும் இத்தால் வெளிப்படுத்துகிறோம்.

மேற்படி கோவில்
**தர்மகர்த்தா சபை**

காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்,
15 05 1990

(C/5035)

## For Advance Education in Australia

அவுஸ்ரேலியாவில் மேற்படிப்பு படிக்க விரும்பும் மாணவர்களுக்கு நேரடிக்கல்வி வசதி உண்டு. இவர்கள் கீழ்க்காணும் பாடங்களைக் கற்கப் பாடசாலை வசதிகள் செய்து கொடுக்கப்படும். கல்வியுடன் சிறுதொழில் வாய்ப்புக்கும் இடம் உண்டு. அங்கு போய்த் தங்க சகல வசதிகளும் இங்கிருந்து செய்து கொடுக்கப்படும். அங்கு உயர் கல்வியைத் தொடர G C.E O/L, G C.E A/L சித்தியடைந்தோர் விண்ணப்பிக்கலாம். ஆங்கிலத்தில் C இல்லாதோர் அவுஸ்ரேலியாவில் 3-6 மாதங்கள் ஆங்கிலக் கல்வி கற்றபின் உயர் கல்வியைத் தொடரலாம்.

### Courses Offered:

**Business Studies:**

Accounting
Accounting with Computing
Business Administration Personnel Management
Industrial Relations

**Maritime Courses:**

Engineering (Marine)
Maritime Electronics
Masters / Mates / Coxswains for Deep- Sea Fishing Trawlers and Coastal Trawlers

**Agriculture:**

Applied Science in Agriculture
Agriculture Production Farm Management
Animal Husbandry

**Medical Science:**

Bachelor of Medicine & Surgery
Bachelor of Health Science in Nursing
Diploma of Health Science in Nursing
Nursing (Pre-registration)
Medical Laboratory Science

**Civil Aviation:**

Commercial Pilots
Aviation Electronics
Aeronautical Engineering

**Applications - Bio - data by post to address below:-**

## Asian Express,

Educational Consultants,
507, Havelock Road,
Wellawatte,
Colombo — 6,
Sri Lanka

[3566]

## தேவை

யாழ் நகரிலுள்ள 'A' Grade தியேட்டர் ஒன்றுக்கு நல்ல அனுபவமுள்ள ''Projector Operator'' இயந்திர இயக்குநர் தேவை. அத்தாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பங்களை அனுப்பவும்.

முடிவு திகதி: 25 - 5 - 90

முகவரி; க. வீரசிங்கம்
நியூ சாந்தி சினிமா
யாழ்ப்பாணம்.

[3569]

**126 ஆவது தென்இந்திய ஸ்பெஷல்யாத்திரை**

ஆரம்பம்: 27-05-90 முடிவு: 13 06 90

கோயில் குருக்கள்மார் (கொக்குவில், மானிப்பாய், வேலணை, வட்டுக்கோட்டை, சுன்னாகம், விளான், அராலி, மூதூர்) குடும்பத்துடன் பங்குபற்றுகிறார்கள்.

**127 ஆவது தென் இந்திய யாத்திரை**

ஆரம்பம்: ஆவணிமா பாடசாலை விடுதலை நாட்களில்

விபரங்கட்கு:

## ★ வினாயகா டூர்ஸ் ★

(அரசாங்கப் பதிவு பெற்றது 7753)
நாகம்ஸ் தியேட்டர் காம்பிளக்ஸ், சுன்னாகம்
இராஜநாயகி தியேட்டர், காங்கேசன்துறை.
அ. வி. அருணாசலம் (முகவர்)

(3576)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

* 1. சைவ சித்தாந்தத்தில் பேராசிரியர் (அறக் கொடைத்தவிசு)

** 2. உடலமைப்பியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II / விரிவுரையாளர் / உதவி விரிவுரையாளர்

*** 3. சட்ட மருத்துவத்தில் உதவி விரிவுரையாளர்

4. மகப் பேற்றியலும் மாதர் நோயியலும் / மன நோயியல் அறுவை மருத்துவத்தில் செய்முறை காட்டுநர்.

5. ஆங்கிலத்தில் போதனாசிரியர் தரம் III

*** 6 உடற்கல்விப் பணிப்பாளர்

**குறிப்பு:**

** 1. உடலமைப்பியல் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II / விரிவுரையாளர் / உதவி விரிவுரையாளர் பதவிக்கு பின்வரும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளும் விண்ணப்பிக்க முடியும்:

(அ) மிருக வைத்தியமாணி அல்லது பல் அறுவைச் சிகிச்சைமாணியும் இதர பட்டப்பின் படிப்புத் தகைமைகளும் உயர் தொழில் தகைமைகளும் உள்ளவர்கள்.

*** 2 இரசாயனவியலில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்துடன் பௌதிகவியலைத் துணைப்பாடமாகக் கொண்டுள்ள அல்லது பௌதிகவியலில் இரசாயனவியலைத் துணைப்பாடமாகக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

**சம்பள அளவுத்திட்டம்**

பேராசிரியர்: ரூபா 12,200 - 6x300 - 14,000/- (மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I: ரூபா 8,000 - 5x250 - 9,250/- (மாதமொன்றுக்கு)

விரிவுரையாளர் (மருத்துவம்): ரூபா 4,500 - 10x200 - 6,500/- (மாதமொன்றுக்கு)

(மருத்துவ பீட விரிவுரையாளர் ஒருவர் முதலாவது நியமனத்தின் போது ரூபா 4,500/- சம்பளத்திற்கு இரண்டு படிகள் அதிகமாக, அதாவது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் 4,900/- ரூபாவில் வைக்கப்படுவார்)

உதவி விரிவுரையாளர்: ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஆண்டொன்றுக்கு

செய்முறை காட்டுநர்: ரூபா 3,250/- மாதமொன்றுக்கு

போதனாசிரியர் தரம் III ரூபா 3,000 - 6x80 - 3,480/- (மாதமொன்றுக்கு)

உடற்கல்விப் பணிப்பாளர்: ரூபா 6,000 - 10x200 - 8,000/- (வினைத் திறமை காண் தடை) ரூபா 8,250 - 7x250 - 10,000/- (மாதமொன்றுக்கு)

பேராசிரியர் பதவிக்கு (அறக்கொடைத்தவிசு) விண்ணப்ப முடிவுத் தேதி 1990 ஆகஸ்ட் 7ஆம் தேதி ஆகும். ஏனைய பதவிகளுக்கு முடிவுத் தேதி 1990 யூன் 08ஆம் தேதி ஆகும்.

விண்ணப்பங்கள் இப் பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடமிருந்து பெறக் கூடிய படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும் பேராசிரியர், அறக்கொடைத்தவிசுப் பதவிகளுக்கு விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு ரூபா 2/- முத்திரை ஒட்டப்பட்ட 23x10 சதம மீற்றர் அளவுடைய கடித உறையும் ஏனைய பதவிகளுக்கு சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23x10 சதம மீற்றர் அளவுடைய கடித உறையும் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

**குறிப்பு:**

* 1. சைவ சித்தாந்தப் பேராசிரியர் (அறக் கொடைத்தவிசு) பதவிக்கான நியமனம் மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமாக இருக்கும்.

** 2. உடற் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990 - 05 - 10

[சி-4517]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

நோனா உடம்பும் உயிரும் மடலேறும்
நாணினை நீக்கி நிறுத்து

**பொருள்:**

(காதலியின் பிரிவால் ஆகிய துன்பத்தைப்) பொறுக்காத என் உடம்பும் உயிரும், நாணத்தை நீக்கி நிறுத்தி விட்டு மடலூரத் துணிந்தன.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288

16 - 05 - 1990 த. பெ இலக்கம் 25


# அரசு செய்யுமா இதனை?

கொக்கிளாய்ப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த தமிழர்கள், மீண்டும் அங்கு சென்று குடியமர்வதற்குத் தயக்கம் காட்டி வருவதாகச் செய்திகள் வந்துள்ளன. சம்பந்தப்பட்ட 662 தமிழ்க் குடும்பங்களும் அவ்வாறு தயக்கம் கொள்வதற்குக் காரணமும் காட்டப்படுகிறது.

கொக்கிளாய்ப் பகுதியில் இரண்டு ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள் உள்ளன, அவற்றில் ஒன்று பாடசாலையில் இயங்குகிறது. பாடசாலையில் இயங்கும் இராணுவ முகாமை மூட வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் வற்புறுத்தியதன்பேரில் அதனை அகற்றுவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டு வருகின்றன. ஆனால் அடுத்த இரண்டாவது. இராணுவ முகாம் தொடர்ந்து இயங்கப்போகிறது.

அனேகமாக மூடப்படும் முகாமில் உள்ள இராணுவ ஆளணியினரும் அங்கேயே போய்ச் சேரலாம் என்றும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. தொடர்ந்து இயங்கவுள்ள முகாம் பலப்படுத்தப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்படுறது.

இதன் நிமித்தமே முன்னர் கொக்கிளாயில் வாழ்ந்து இடம்பெயர்ந்த 662 தமிழ்க் குடும்பங்களும் தாங்கள் வாழ்ந்து அனுபவித்த பூமியில், தமது குருதியை வியர்வையாக்கி உழைத்து உரமாக்கிய பூமியில் மீளச் சென்று குடியேறத் தயக்கம் காட்டுகிறார்கள்.

ஸ்ரீலங்கா இராணுவம் தமிழர்களுக்கு இழைத்த வேதனைமிக்க, மறக்க முடியாத, அரக்கத்தனமான அட்டூழியங்களின் அனுபவங்களைக் கொண்டு, எந்தத் தமிழனும் இராணுவ முகாம் ஒன்று இருக்கும் இடத்திற்கு அருகில் குடியிருக்கத் தயங்குவான் என்பது இயல்பு.

சனச்செறிவு குறைந்த "ஏகாந்தமான" பிரதேசங்களில் இராணுவ முகாம்கள் இருந்தால் பெண்டு. பிள்ளைகளுடன் குடும்பமாகச் சென்று குடியிருக்க எவரும் தயங்குவர்; அச்சம் அவர்களை அறியாமலே குடிகொண்டுவிடும். சூடு கண்ட பூனைகள் எப்படி மீண்டும் அடுப்பங்கரை நாட முனையும்?

ஆயுதங்களும், ஆளணியும் உள்ள இராணுவத்தினரிடமிருந்து நிராயுதபாணிகளான தமிழ்ப் பொதுமக்கள் தற்காப்புச் செய்து கொள்வது இயலுமான காரியமா?

ஆயினும், தாங்கள் முன்பு வாழ்ந்த பகுதிகளிலேயே தமிழர்கள் மீண்டும் குடியேறத் தயங்குவார்களானால், அச்சத்தின் நிமித்தம் அங்கு குடியமர மறுப்பார்களானால் — அந்த நிலையை அனுமதித்தால்— தமிழ் மண்ணில் மக்கள் பரந்து வாழ முடியாத நிலையும், சிங்களக் குடியேற்றங்களுக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்கும் நிலையும் உருவாகும்.

தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவ முகாம் எதுவும் இருக்காமல் பார்த்துக் கொள்வதே இதற்கு ஒரேயொரு மாற்றுவழி!

தமிழர்களுக்கு ஸ்ரீலங்கா இராணுவத்தின் பாதுகாப்பில் நம்பிக்கையில்லை. ஸ்ரீலங்கா இராணுவம் தமிழர்களுக்குத் தருவதாகக் கருதக்கூடிய பாதுகாப்பு, உதவிக்கு வந்து உபத்திரவம் கொடுக்கும் உயிர்கொள்ளும் நிலைக்குச் சமனானது. ஆகையால் அவர்களின் பாதுகாப்பு இவர்களுக்குத் (தமிழர்களுக்குத்) தேவையில்லை இந்த விடயம் வெளிப்படையாகக் கூறப்பட்டு வரும் ஒன்று. அதன் பின்னரும் தமிழ்ப்பிரதேசங்களில் இராணுவ முகாம்கள் இருக்க வேண்டும் என்று அரசு விரும்புவதன், செயற்படுவதன் அர்த்தம் என்ன?

தமிழர்களை இராணுவ பலம் கொண்டு அடக்க வேண்டும். அதனைப் பாவித்து தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை முறியடிக்க வேண்டும், மழுங்கடிக்கச் செய்ய வேண்டும் என்று நினைத்தால் மட்டுமே தமிழர் பிரதேசங்களில் ஸ்ரீலங்கா இராணுவம் நிலைகொள்ள வேண்டிய தேவை உண்டு.

அந்த எண்ணம் அரசிடம் அறவே இல்லை என்று நிரூபிக்க வேண்டுமோனால் வடக்கு—கிழக்கில் இருந்து இராணுவத்தை முற்றாக வாபஸ் செய்யவேண்டும்.

அதுவும் உடனடியாக இயலாது என்றால், நாட்டின் மூன்றில் ஒரு பகுதியை அரசாங்கம் தமிழர்களுக்கு விற்றுவிட்டது என்று எதிர்க்கட்சிகள் கூப்பாடு போடும் என்ற அரசியல் பயம் இருந்தால், முதற்படியாக, தமிழ் மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு இராணுவ முகாமை மட்டுமே வைத்துக்கொண்டு ஏனையவை எல்லாவற்றையும் மூடட்டும். அரசு இதையாவது செய்து தனது உண்மையான நிலையைப் புலப்படுத்துமா?

# இன்பருட்டி போறாட் வங்கி வடமராட்சியில் ஒரு முன்மாதிரி

## திறப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம், மே 16

"இன்பருட்டி கிராம மக்களின் விடா முயற்சியாலும் ஒற்றுமையாலும் தான் இந்த ஒருமாடிக் கட்டடம் நிமிர்ந்து நிற்கிறது. முழு வடமராட்சியிலும் இந்த வங்கி முன்மாதிரியாகத் திகழ்கிறது."

இன்பருட்டி போறாட் கிராமிய அபிவிருத்தி வங்கியின் திறப்புவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறை உதவி அரசாங்கஅதிபர் திரு. வை. வேலும்மயிலும் மேற்கண்டவாறுகூறினார்.

போறாட் வடமாகாண இணைப்பதிகாரிதிரு. ஆனந்தராசா போறாட் வங்கியைத் திறந்து வைத்தார்.

மீன் பிடி ஆய்வாளர் திரு. குருமூர்த்தியும் இந்த விழாவில் உரை நிகழ்த்தினார். (சு)

## மூளைக்காய்ச்சல் பரவும் ஆபத்து

கொழும்பு, மே 16

மூளைக்காய்ச்சல் நோய் எதிர்வரும் செப்டம்பர்மாதத்தில் நாடு முழுவதும் பரவும் ஆபத்து இருப்பதாக எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு விடுத்த இந்த எச்சரிக்கையில், இந் நோயினால் ஏற்கனவே ஆயிரத்து 200 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நோய் பரவாமல் தடுக்க தடுப்பூசி ஏற்றும் இயக்கம் ஒன்றை அமைச்சு ஆரம்பிக்க உள்ளது.

இந்த நோய் அதிகமாகக் காணப்படும் வவுனியா, திருகோணமலை, அனுராதபுரம், கம்பஹா, குருணாகல், ராகம, தெஹிவளை ஆகிய பகுதிகளில் சுமார் ஒரு லட்சம் பேருக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் டாக்டர் ஜோ. பெர்னாண்டோ தெரிவித்தார். (உ-எ)

## நினைவு விழா

யாழ்ப்பாணம் மே 16

திருவாசகம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் நினைவு விழா இம்மாதம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு தொண்டமானாறு செல்வச்சந்நிதி சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும்.

இளைப்பாறிய அரசாங்க அதிபர் திரு. செ. சிவஞானம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகி திரு. செ. மோகனதாஸ் திருவாசக சுவாமிகளின் உருவப்படத்தை திரைநீக்கம் செய்துவைப்பார்.

திவ்விய ஜீவன சங்கத்தலைவர் திரு. சி. கனகரத்தினம், "தேனருவி" திரு. வே. சிவஞானம், யாழ் பல்கலைக் கழக இந்து நாகரீகத்துறைத் தலைவர்கலாநிதி ப.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றுவார்கள் (இ-7)

## விசேஷ நிதி ஒதுக்கீடு

வட்டுக்கோட்டை, மே 16

சிறப்பான முறையில் இயங்கி வரும் யாழ் மாவட்டத்திலுள்ள ஐந்து நூல் நிலையங்களுக்கு விசேஷ நிதியை ஒதுக்கீடு செய்ய யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா முயற்சி எடுத்துள்ளார்.

சங்கானைப் பட்டினசபை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. த. தங்கராசா இதனைத் தெரிவித்தார்.

இந்த ஐந்து நூல்நிலையங்களில் சங்கானைப் பட்டின சபை நூல் நிலையமும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (சு - 161)

உவர் மண்ணால் வயல் நிலங்கள் பாதிப்பு:

# கோப்பாய் - கைதடி கடலை ஆழமாக்குமாறு கோரிக்கை

## அரச அதிபருக்கு மகஜர்

கோப்பாய் மே 16

வரட்சிக்காலங்களில் கோப்பாய் கைதடி கடல் வற்றி விடுவதால் காற்று வீசும் போது உவர் மண் அண்மையில் உள்ள தோட்டங்களைச் சென்றடைகிறது இதனால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. ஆகவே இந்தக் கடல் பகுதி ஆழமாக்கப்படவேண்டும்.

யாழ் அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிரட் டிடம் மேற்கண்ட கோரிக்கையை கைதடிப் பகுதி சனசமூக, கிராம முன்னேற்றச்சங்கப் பிரதிநிதிகள் விடுத்தனர்.

யாழ். அரசாங்க அதிபர் தனது தென்மராட்சி உத்தியோகபூர்வ விஜயத்தின் போது நேற்று முன் தினம் கைதடிக்கு வந்திருந்த போது இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டு மகஜரும் கையளிக்கப்பட்டது.

கைதடி ஆயுள்வேத ஆஸ்பத்திரியை புனரமைக்கும்படியும் இவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

அரச அதிபரின் சாவகச்சேரி விஜயத்தின் போது அப்பகுதியில் நிலவும் குடிதண்ணீர்ப் பிரச்சனை உட்பட பல்வேறு பிரச்சனைகள் கலந்தாலோசிக்கப்பட்டன. (இ-72)

## புற்றுநோய் அறிவியல் கண்காட்சி

புற்றுநோயும் அந்நோய் ஏற்படாமல் தடுப்பது பற்றியும் மக்களுக்கு அறியத்தரும் பொருட்டுவடமாகாண புற்றுநோய்ச்சங்கம் 3 நாள் புற்றுநோய் "அறிவியல்கண்காட்சி" ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

கண்காட்சி தெல்லிப்பளை வர்த்தலைவிளான் புற்றுநோயாளர் விடுதியில் இம்மாதம் 18, 19, 20 ஆம்திகதிகளில் காலை8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரைநடைபெறும். (இ-7)

## சமய சந்நிதியில்

### வேளாங்கண்ணி மாதா திருவிழா

பண்டத்தரிப்பு கடாப்புலம் அரசினர் வைத்தியசாலை புனித வேளாங்கண்ணி மாதா திருவிழா இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 19 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறும்

தினமும் மாலை 5 00 மணிக்கு திருப்பலி பூஜை இடம்பெறும். 19 ஆம் திகதி திருநாட். திருப்பலி பூஜை காலை 7 மணிக்கு நடைபெறும். (சு-7)

### புனித பிலிப் நேரியார் திருவிழா

யாழ்ப்பாணம். மே 16

செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார்தேவாலயத்தில் இம்மாதம் 17 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றம் நடைபெறும்.

18 ஆம் திகதியிலிருந்து 24 ஆம் திகதிவரை தினமும் மாலை6 மணிக்கு செபமாலை திருப்பலி, மறையுரை ஆகியன இடம்பெறும்.

25 ஆம்திகதி நற்கருணை நாளாகும் 26 ஆம் திகதி காலை 7.00 மணிக்கு திருநாள் திருப்பலியும்திருச்சுருப பவனியும் இடம்பெறும். (இ-7)

## ச. ச அபிவிருத்தி உத்தியோகத்தர்

# போட்டிப் பரீட்சையில் தோற்ற அனுமதிக்குமாறு கோரிக்கை

அம்பாறை மே 16

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள நிர்வாக சேவை உத்தியோகத்தர் உதவி வெற்றிடங்களை நிரப்ப நடத்தப்படவுள்ள விசேஷ போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் உள்ள சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் அனுமதி வழங்கப்பட வேண்டும். இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண சனசமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் சார்பாக இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் அமைப்பாளர் ஜனாப் எஸ். எம். இத்ரீஸ், இக்கோரிக்கை தொடர்பான தந்திகளை அனுப்பிவைத்துள்ளார்.

ஜனாதிபதி, வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர், பொது நிர்வாக அமைச்சின் செயலாளர், உள்ளூராட்சி திணைக்கள ஆணையாளர் உள்ளூராட்சி திணைக்கள வடக்கு, கிழக்கு மாகாண ஆணையாளர் ஆகியோருக்கு மேற்படி கோரிக்கை தொடர்பான தந்திகள் அனுப்பப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஜூன் மாதம் 23 ஆம் திகதி நடைபெறவிருக்கும் போட்டிப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-14)

## தேர்முட்டி

கோப்பாய் மே 16

கோப்பாய் பலானை அம்மன் கோவிலுக்கு 11 லட்சம் ரூபா செலவில் தேர் முட்டி அமைக்கப்பட்டு வருகிறது. (இ-72)

## செய்திக்கொத்து

### பேச்சு போட்டிகளில் வெற்றிபெற்றோர்

யாழ்ப்பாணம் மே 16

இலங்கை இந்து கலாசார அமைச்சினால் அண்மையில் யாழ் மாவட்டத்தில் நடத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் உடுவில் கற்பொக்கனை கலைமதி சனசமூக நிலையத்தைச் சேர்ந்த பின்வருவோர் வெற்றி பெற்றுள்ளனர்.

மத்திய பிரிவில் 1 ஆம் இடம் செல்வி சி. கலையரசி 2 ஆம் இடம் செல்வி உ. கபாலினி, 3 ஆம் இடம் செல்வி சி. சிதாஜினி.

மேற்பிரிவில் 1 ஆம் இடம் செல்வி தி. அன்புக்கரசி, 2 ஆம் இடம் செல்வி பொ. சுஜீவா

உலகத்தமிழ் பண்பாட்டுக் கழக இலங்கைக் கிளை நடத்திய பேச்சுப் போட்டியில் பெண்கள் பிரிவில் பின்வருவோர் வெற்றி பெற்றனர், கீழ்ப்பிரிவில் 1 ஆம் இடம் செல்வி சி. சிவாஜினி மத்திய பிரிவில் 1 ஆம் இடம் செல்வி சு. மகேந்திரராணி மேற்பிரிவில் 1 ஆம் இடம் செல்வி ஈ. சத்தியபிரபா. (இ-7)

### குரங்கு கடித்து சிறுமி காயம்

பச்சிலைப்பள்ளி, மே 16

வளர்ப்புக் குரங்கு, வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி மீது பாய்ந்து கடித்ததால் காயமேற்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி தபால்கந்தோர் வீதியில் இடம் பெற்றது.

சிவானந்தன் மாதங்கி (வயது 4) என்னும் சிறுமியே காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவராவார். (ஒ-117)

### பாடசாலை விளையாட்டுப் போட்டி

கிளிநொச்சி திருவையாறு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் இல்ல விளையாட்டுப்போட்டி பாடசாலை அதிபர் திரு. நா. நடராசா தலைமையில் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெற உள்ளது.

இதில்கிளிநொச்சி மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. வேலாயுதம் பிரதம விருந்தினராகவும் மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. கனகராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். (க-76)

### பற்றாக்குறை

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைகளில் ஊழியர் பற்றாக்குறையால் நோயாளர்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர். (ப-117)

# நயினாதீவு நாகபூசணி அம்மன் வருடாந்த உற்சவ ஒழுங்குகள்

அனலைதிவு, மே 16

நயினாதீவு வருடாந்த உற்சவம் ஜூன் 23 ஆம் திகதி தொடக்கம் ஜூலை 8 ஆம் திகதி வரை நடைபெறும்.

இது சம்பந்தமான மாநாடு வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. க. சபாபதிப் பிள்ளை தலைமையில் அவரது பணிமனையில் கடந்த திங்கள் நடைபெற்றது.

இம்மாநாட்டில் சுகாதாரப் பகுதி, சுங்கப் பகுதி பெருந்தெருக்கள் அதிகாரசபை, பிரதேசசபை, மின்சார சபை, இலங்கைப் போக்குவரத்துச் சபை, மினி பஸ் சங்கங்கள், கோவில் நிர்வாகம், பொது நல அமைப்புச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் மற்றும் கிராம சேவகர்கள் நயினை அமுதசுரபி அன்னதான சபை உறுப்பினர், தனியார் படகுச் சொந்தக்காரர், செனயோன்ஸ் அம்புலன்ஸ், தொண்டர்சபையினர், சாரணர் இயக்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இம்முறையாத்திரிகர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருக்குமென எதிர்பார்ப்பதால் அதற்கேற்ப கூடிய சுகாதார வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. திருவிழா ஆரம்பம் முதல் முடியும் வரை தற்காலிக வைத்தியசாலை இயங்க பிரதி சுகாதாரப் பணிப்பாளர் ஒழுங்குகள் செய்ய வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. குறிகட்டுவான், இறுப்பிட்டி துறைமுகங்களிலும் சுகாதார வசதிகள், குடிநீர் வசதிகளை பிரதேச சபை செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அரச காரியாலங்கள் இயங்க இம்முறை கோவில் நிர்வாகம், நிரந்தர கட்டிடங்களை அமைத்துக் கொடுத்துள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச்சபை கூடிய பஸ்களைச் சேவையிலீடுபடுத்தும். மினி பஸ்சங்கமும் தங்கள் சேவைகளை வழங்கும். போக்குவரத்துச்சபை, மினிபஸ் சங்கம், உதவி அரசாங்க அதிபரின் நிர்வாக அதிகாரி ஆகியோர் ஒன்றிணைந்து சிறப்பான, பண்பான முறையில் சேவைகளை நன்கு நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இம்முறை கூடிய யாத்திரிகர்களை எதிர்பார்ப்பதால் இலகுவான முறையில் அவர்களை ஏற்றி இறக்க குறிகட்டுவான், இறுப்பிட்டி ஆகிய இருதுறைமுகங்களையும் பயன்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

சகல படகுகளும் தகுதி வாய்ந்த அதிகாரியால்திருப்தி என உறுதிப்படுத்தப்பட்ட பின்பே அனுமதி வழங்கப்படும்.

நெடுந்தீவு அனலைதீவு தனியார் படகுகளும் நயினாதீவு, குறிகட்டுவான் இறுப்பிட்டி சேவையில் உதவி அரசாங்க அதிபரின் நேரடிக்கண்காணிப்பில் சேவையிலீடுபடுத்தப்படும். மூன்று முறை குறிகட்டுவானுக்கும் ஒரு முறை இறுப்பிட்டிக்கும் என்ற முறை

(5 ஆம் பக்கம் பார்க்க)

## நாணய மாற்று விகிதம்

14-05-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:—

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 231.11 | 232 07 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.40 | 4002 06 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6688.54 | 6729 70 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2420.73 | 2443.71 |
| 100 | பிரெஞ்சு பிராங்க் | 712 54 | 726 94 |
| 100 | ஜப்பானிய யென் | [illegible] | [illegible] |

## வாசகர் திருமுகம்

### கரப்பான் பூச்சியின் ஆட்சி

யாழ் பெரியாஸ்பத்திரி 7 ஆம் வாட்டில் தங்கிச்சிகிச்சை பெறும் நோயாளிகளுக்குப் பெரும் தலையிடியாக கரப்பான் பூச்சி பல்கிப் பெருகியுள்ளது. நோயாளிகளின் கட்டிலுக்கு அண்மையில் இருக்கும் லொக்கர் பெட்டிகளில் உற்பத்தியாகி அங்கிருந்து கொண்டு அதற்குள் இருக்கும் சாப்பாட்டை அசிங்கப்படுத்தி மேலும் நோயாளிக்குத் தொல்லை கொடுக்கும் விதத்தில் இரவில் பறந்தும் திரிகின்றன. இவைகளின் தொல்லையை நீக்க ஆஸ்பத்திரியின் துப்பரவு செய்யும் பகுதி உத்தியோகத்தர்கள் எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது கவலைக்கிடமானது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் கவனமெடுத்து ஆவன செய்வார்களா?

**க. க. இராஜேந்திரன்,**
யாழ்ப்பாணம்.

### வேலை நியமனம்

போட்டிப் பரீட்சை வைத்து அதில் சித்தி பெற்றவர்களுக்கே பதவி நியமனம் வழங்கப்படும் என்று பொது சனத் தொடர்பு சாதனங்கள் கூறுகின்றன.

நான் மாகாணசபை தட்டெழுத்தாளர் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று 21-12-89 — 23-12-89 வரை நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கும் சென்று வந்தேன். எனக்கு இன்னும் நியமனம் வழங்கப்படவில்லை.

தட்டெழுத்தாளர் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படும் போது எங்களுக்கு பதவி நியமனம் வழங்கப்படுமா?

இது பற்றி அறிவதற்கு யாருடன் தொடர்பு கொள்வது? சம்பந்தப்பட்டவர்கள் கூறுவார்களா?

**செல்வி க. சிவலிங்கம்,**
யாழ்ப்பாணம்.

### நினைவாலயம்

நெடுந்தீவு மே 16

நெடுந்தீவில் போராளிகளின் நினைவாக தூபி மற்றும் சிறுவர்பூங்கா அமைக்கும் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (இ - 111)

### ஆலய மண்டபம்

சாவகச்சேரி மே 16

மட்டுவில் லூர்து அன்னை ஆலய மண்டபத் திறப்பு விழா நாளை 17 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும். (ப - 31)

### தமிழ்த்தின போட்டி

உருத்திரபுரம் கொத்தணி பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ் தினப் போட்டி நாளை 17 ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது.

இந்த போட்டிக்கு உருத்திரபுரம் கொத்தணி அதிபர் திரு. ம. பத்மநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (க-76)

### இலவச பாடநூல்கள் கிடைக்கவில்லை

கிளிநொச்சி மே16

கிளிநொச்சிமாவட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இது வரை முழுமையாக இலவச பாடநூல்கள் கிடைக்கவில்லை.

ஒருசில பாடங்களுக்கு உரிய புத்தகங்கள் இதுவரை பாடசாலைகளுக்கு வந்து சேராததால் புத்தகங்கள் வழங்க முடியாது உள்ளதாக பாடசாலை அதிபர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இந்த வருடத்தின் முதல் தவணைமுடிவடைந்து விட்ட நிலையில் கூட மாணவர்களுக்கு இலவசநூல்கள் கிடைக்காததால் இவர்கள் கல்வியை தொடர்வதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றார்கள். (க-76)

### புனரமைப்பு வேலை

நெடுந்தீவு மத்தி பெருக்கடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய புனரமைப்பு வேலைகள் முடியும் நிலையில் உள்ளது புனரமைப்புப் பணி முடிவடைந்ததும் கும்பாபிஷேகம் நடைபெறும். (111)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

★ சோவியத் யூனியனில்

# அணுகுண்டு சோதனையால் ஒரு லட்சம் பேர் பாதிப்பு!

## பேராசிரியர் வெளியிட்ட தகவல்

இஸ்தான்புல் (துருக்கி) மே 15

அணு குண்டு சோதனைகளை ரஷ்யா, கஜக்ஸ்தான் பகுதியில் தொடர்ந்து நடத்தி வருவதன் விளைவாக அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒரு இலட்சம் மக்கள் கடுமையான கதிர்வீச்சுப் பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கிறார்கள்; பலவித நோய் பாதிப்புக்களுடன், சராசரி ஆயுள் காலமும் குறைந்துள்ளது'' என்று ரஷ்ப் பேராசிரியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அணுக் கதிர் வீச்சின் பாதிப்பு தொடர்பாக இதுவரை வந்த தகவல்களெல்லாம் அணுர்குண்டு வீச்சு, அணுமின் நிலைய விபத்து, அணு சக்தியால் இயங்கும் கப்பல்களில் ஏற்பட்ட விபத்து ஆகியவை தொடர்பானவையே.

அணு குண்டு சோதனை நடைபெறும் இடங்கள் மனித நடமாட்டம் இல்லாத பகுதியில் நடைபெறுவதாகவும், இதனால் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாது என்றும் கருதப்பட்டு வந்தது.

ஆனால் இவற்றைப் பொய்யாக்கும் வகையில் திடுக்கிடும் உண்மைகளை அந்தப் பேராசிரியர் வெளியிட்டுள்ளார்.

முன்பு அணு உலகு வெடித்ததால் ரஷ்யாவில் செர்னோபில்லில் இலட்சக்கணக்கானோருக்குப் பாதிப்பு ஏற்பட்டது.

தற்பொழுது மற்றொரு ரஷ்ய குடியரசான கஜக்ஸ்தானில் இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ரஷ்ய நாட்டின் தெற்குப் பகுதியிலுள்ள கஜக்ஸ்தான் குடியரசின் தலைநகர் அல்மா அட்டாவிலுள்ள 'கஜக் புற்று நோய் மற்றும் கதிரியக்கவியல் நிலையத்தில், பேராசிரியராகப் பணி புரியும் அந்த டாக்டர், துருக்கியின் தலைநகர் இஸ்தான்புல்லில் நடைபெறும் மருத்துவ மாநாட்டில் கலந்து கொண்ட போது தகவல்களை அவர் வெளியிட்டார்.

★ கிழக்கு ஐரோப்பாவில்

# கம்யூனிஸ கொள்கையின் வீழ்ச்சி முதலாளித்துவத்தின் வெற்றி அல்ல!

## பரிசுத்த பாப்பரசர் எச்சரிக்கை!

வத்திக்கான் மே 15

கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிஸத்துக்கு ஏற்பட்டுள்ள தோல்வியை முதலாளித்துவத்துக்கு ஏற்பட்ட வெற்றி என்று எண்ணி விடக் கூடாது.

பரிசுத்த பாப்பரசர் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார்.

மெக்ஸிக்கோவில் எட்டு நாள் விஜயம் முடிவில் வட மெக்ஸிக்கோவில் துரங்கோ நகரில் வர்த்தகப் பிரமுகர்கள் மத்தியில் பரிசுத்த பாப்பரசர் பேசினார்.

முதலாளித்துவம் தான் உலகின் சரியான பாதை என்று மட்டும் எண்ணி விடக் கூடாது என்றும் பாப்பரசர் சொன்னார்.

மூன்றாவது உலக நாடுகளில் தாராள முதலாளித்துவக் கொள்கைகளினால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து கூர்மையாக அவதானிக்க வேண்டும் என்றும் பாப்பாண்டவர் கேட்டுக் கொண்டார்.

''கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸம் முற்றாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

இதனைச் சிலர் கம்யூனிஸத்தை முதலாளித்துவம் வெற்றி கண்டு விட்டதாக அதீத கற்பனையில் ஆழ்ந்திருக்கின்றனர்

வளர்முக நாடுகளில் முதலாளித்துவம் உருவாக்கிய பிரச்சனைகளை நாம் கண்டும் காணாமல் இருக்க முடியாது -

இப்படி பாப்பரசர் சொன்னார்.

கிழக்கு ஐரோப்பாவில் உள்ள பல நாடுகளில் கம்யூனிஸ ஆட்சி கவிழ்ந்து ஜனநாயக முறை மலரத் தொடங்கியுள்ளது தெரிந்ததே! (எ)

# எவரெஸ்டில் ஏற 5 ஆண்டு கால தடை விதிக்கக் கோரிக்கை!

வெல்லிங்டன், மே 15

எவரெஸ்ட் சிகரத்தில் மலையேறும் கோஷ்டிகள் ஏறுவதை அடுத்த ஐந்தாண்டு காலத்துக்கு தடை செய்யும் படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதனை விடுத்தவர் எவரெஸ்ட் சிகரத்தில் முதன் முதலாக ஏறிச் சாதனை புரிந்த சேர் எட்மண்ட் ஹிலாரி ஆவார்.

இவர் 23-5-1953 இல் எவரெஸ்ட் உச்சியை ஷெர்பா டென்சிங்குடன் முதல் தடவையாக அடைந்தார்.

இதுவரை காலமும் மலை ஏறியவர்களால் எவரெஸ்டுக்கு ஏற்பட்ட சேதங்கள் இயற்கையான முறையில் நீங்கி பழைய நிலையை அடைய அடுத்த ஐந்து ஆண்டு காலத்துக்கு எவரெஸ்டில் ஏறத் தடை விதிக்கப்பட வேண்டும் என்று எட்மண்ட் ஹிலாரி தெரிவித்தார்.

இவரது மகன் பீற்றர் ஹிலாரி கடந்த வாரமுன் எவரெஸ்ட் உசியை அடைந்தார். (எ)


யா/சங்கானை சிவப்பிரகாச ம. வி. சங்கானை

### காவலாளி தேவை

23-05-90 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும். வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும்.

செயலாளர்,
பா. அ. சங்கம்.

[3567]


★ 1989 இல்

# சீனாவில் இரண்டாயிரம் பேர் விமான விபத்தில் மரணம்!

பீகிங், மே 16

1989 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 70 விமான விபத்துக்களில் 2 ஆயிரத்துக்கு அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

100 கோடிக்கு அதிகமான மக்கள் வாழும் சீனாவில் கடந்த ஆண்டு ஐந்து நாட்களுக்கு ஒன்று என்ற வீதத்தில் விமானவிபத்து இடம்பெற்றது

இத்தகவலை பீகிங் சஞ்சிகை ஒன்று வெளியிட்டது.

விமான ஓட்டிகளின் தவறுகள் தான் இவ்விபத்துக்களுக்குக் காரணம் என்று கூறப்பட்டாலும் பராமரிப்பு குறைவே பிரதான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

# சீனாவில் ஜனநாயகம் வளர அமெரிக்காவில் தேசிய தினம்

வாஷிங்டன் மே 15

எதிர்வரும் ஜூன் 3 ஆம் திகதியை தேசிய தினமாக ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் பிரகடனம் செய்திருக்கிறார்.

சீனாவில் சுதந்திரம் மனித உரிமைகள் நிலவுவதற்கு ஆதரவு தெரிவித்து இப்பிரகடனத்தில் அமெரிக்க ஜனாதிபதி புஷ் கையெழுத்திட்டார்.

கடந்த ஆண்டு ஜூன் 3 ஆம் திகதி சீனத் தலைநகர் பீகிங்கில் தியனமன் சதுக்கத்தில் ஜனநாயக உரிமை கோரி திரண்டிருந்த நிராயுதபாணிகளான மக்கள் மீது இராணுவ அடக்குமுறை பாவிக்கப்பட்டது. அப்போது ஆயிரக் கணக்கானோர் உயிரிழந்தனர்.


கல்வித் திணைக்களம் - யாழ்ப்பாணம்

### கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பிரதேசப் பாடசாலைகட்குத் தேவையான உருக்குத் தளபாடங்கள் வழங்குதல்

யாழ் பிரதேசப் பாடசாலைகட்குத் தேவையான கீழ்க்காணப்படும் உருக்குத் தளபாடங்களை வழங்குவதற்கும், விநியோகிப்பதற்குமாக முத்திரையிடப்பட்ட கேள்விகள். உருக்குத் தளபாட உற்பத்தியாளர்கள் / விநியோகஸ்தர்களிடம் இருந்து 4-6-90 ஆம் திகதி காலை 10.00 மணி வரை யாழ் கல்வித் திணைக்கள கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

02. இத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட படிவத்திற்கமையத் தயாரிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் (இணைப்பிரதிகளில்) இத்திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் உரிய நேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடதுகை மேல் மூலையில் ''பாடசாலைத் தளபாடங்கட்கான கேள்விகள்'' என எழுதுதல் அவசியம். கேள்வி முடிவு நேரத்தின் பின்னர் கேள்விகள் திறக்கப்படும். அச்சமயம் கேள்வியாளர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

03. கேள்விப் படிவங்கள், நிபந்தனைகள், மாதிரிப் படங்கள், விபரக்கூற்றுகள் ஆகியவைகளை, மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ 50/- காசாகவும் மீளளிக்கப்படத்தக்க வைப்புப் பணமாக ரூ 2500/ஐ யாழ்ப்பாணப் பிரதேசக்கல்விப் பணிப்பாளரின் பெயரில் யாழ் இலங்கை வங்கியிலிருந்து பெறப்பட்ட கொடுப்பனவுக் கட்டளையாகவும் 25-5-90 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் இவ்வலுவலகத்தில் செலுத்தி உரிய பற்றுச் சீட்டினைச் (பொது 172) சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ள முடியும்.

04. தேவைப்படும் தளபாடங்கள் பற்றிய விபரம்:-

(அ) மாணவர் உருக்குக் கதிரைகள்
(ஆ) மாணவர் உருக்கு மேசைகள்
(இ) பாலர் உருக்குக் கதிரைகள்
(ஈ) பாலர் உருக்கு மேசைகள்

இ. சுந்தரலிங்கம்
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம். 1990-05-07

(சி/4518)


### ஜெனரலுக்கு 10 நாள் தடுப்புக்காவல்

பிரேஸிலியா, மே15

பிரேஸில் இராணுவ ஜெனரல் நியூட்டன் குறாஸ் என்பவருக்கு கடந்த வெள்ளிக்கிழமை பத்து நாள் தடுப்புக்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

பிரேஸில் ஜனாதிபதி பெர்னாண்டோ கொலர்டி மெல்லோ தன்னைத் தானே தலையில் சுட்டு இறக்க வேண்டும் என்று இந்த இராணுவ ஜெனரல் கூறினாராம். (எ)

### மாமல்லபுரத்தில் பல்லவர் கோட்டம்

சென்னை, மே 15

மாமல்லபுரத்தில் பல்லவர்கோட்டம் அமைக்கதமிழக அரசு தீர்மானித்திருக்கிறது

இதனை சட்டசபையில் அறநிலைய, சுற்றுலா, வனத்துறை அமைச்சர் கே. பி. கந்தசாமி தெரிவித்தார்.

மாமல்லபுரத்தில் பல்லவபுர சுற்றுலா வளாகம் ஆகியன மத்திய அரசு சுற்றுலா துறை நிதி உதவியுடன் அமைக்கப்படும் என்றும் அமைச்சர். சொன்னார் (எ)

### கடற்படையினர் சுட்டுக்கொலை

மணிலா, மே 15

பிலிப்பீன்ஸில் அமெரிக்கத் தளத்திற்கு வெளியே 02 அமெரிக்ககடற்படை வீரர்கள் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அமெரிக்கத் தளங்கள் பிலிப் பீன்ஸில் தொடர்ந்து இருப்பது குறித்து இரண்டு அரசுகளுக்கும் இடையே பேச்சுகள் ஆரம்பமாகும் தருணத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது. (ஓ-எ)

### நிக்கரகுவாவில் வேலைநிறுத்தம்

மனாகுவா, மே 13

200 சதவீத சம்பள அதிகரிப்புக் கோரி சுமார் 60 ஆயிரம் அரசு ஊழியர் நிக்கரகுவாவில் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். (எ)


குமுலுஸ் D.F. போட்டி


# BASF குமுலுஸ் D.F.

பாவித்து மிளகாய் செய்கையில் அதிக விளைவு பெறுவதோடு பரிசுகளையும் பெறுங்கள்

| | |
|---|---|
| நப்சாக் தெளி கருவி — | 5 |
| ஸ்போட்ஸ் துவிச்சக்கர வண்டி — | 5 |
| கைத்தெளி கருவி — | 5 |
| சிறிய வானொலிப்பெட்டி — | 20 |
| எவரெடி ரோச் லைற் — | 48 |
| ரீ சேட் — | 100 |

மிகவும் இலகுவாக இந்த போட்டியில் பங்குபற்றலாம். நீங்கள் செய்ய வேண்டியது.

1. கீழேயுள்ள கூப்பனை அல்லது குமுலுஸ் DF பைக்கற்றுகளிலுள்ள கூப்பனை நிரப்பி, குமுலுஸ் பைக்கற்றுகளின் மேல்பகுதியை வெட்டி ஒவ்வொரு கூப்பனுடனும் 5 குமுலுஸ் மேல்பகுதிகளை சேர்த்து. பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 186 வக்சோல் வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் பலமுறை அனுப்பலாம்.
2. தபாலுறையின் இடதுபக்க மேல்பகுதியில் ''குமுலுஸ் DF போட்டி'' என எழுதவும்.
3. போட்டியின் முடிவு திகதி 30-06-1990
4. போட்டியின் அதிஷ்டசாலிகளின் பெயர்கள் பத்திரிகை மூலமும் கடிதம் மூலமும் அறிவிக்கப்படும்.
5. பின்லே கெமிக்கல்ஸ் ஊழியர்களும், பேர்ஸ்ற் அன் போவேட் லிமிட்டெட் ஊழியர்களும் இந்த போட்டியில் பங்குபற்றமுடியாது.




வெட்டி அனுப்பவேண்டிய பகுதி



பெயர் ______
முகவரி ______
வியாபாரியின் பெயர் ______
முகவரி ______

பின்லே கெமிக்கள்ஸ் அன் டையிஸ் (பிரைவெட்) லிமிட்டெட்
(விவசாய இரசாயன பகுதி)
186, வக்சோல் வீதி, கொழும்பு 2.

பீடை நாசினிகள் அபாயகரமானவை. அவதானமாக பாவிக்கவும்.

Licence No S/731



பலரின் வேண்டுகோளுக்கிணங்க

## இலங்கை நிருவாக சேவை (SLAS)

போட்டிப் பரீட்சைக்கான

## விசேட பயிற்சி வகுப்புகள்

2 ஆவது பிரிவு
ஆரம்பம் 19-05-1990
(பிற் பகல் 2 — 5)

★ இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் 18-05-90 ன் முன் விண்ணப்பிக்கலாம்.
★ விண்ணப்பப் படிவங்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பட்டதாரிகளுக்கும் / அரச உத்தியோகத்தர்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

★ இலவச பாடக்குறிப்புகள்
★ கட்டணம் ரூபா 300/-
★ விரிவுரைகள் சனி, ஞாயிறு, விடுமுறை தினங்களில்

## ASTAN Institute

166/1, Hospital Road, Jaffna.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)

[சி-5022]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தேவை

அனுபவமும் தகமையும் உள்ள பெண் கணக்கு லிகிதர் தேவை. தகுதியானோர் தொடர்பு கொள்ளவும்.

**North Ceylon Technical Institute**
14, St PETERS LANE,
HOPITAL ROAD,
JAFFNA.

[சி/4520]

TELLIPPALAI M. P. C. S. LTD.

## I.A.B December 1990 Examination

(Inter National Association of Book Keepers London)

For G. C. E (O/L), (A/L) Students

Preliminary - 400/-
Intermediate - 450/-

Contact:

**The Education officer**
Tellippalai M. P. C. S. Ltd.
Tellippalai.

THE CLASSES WILL START ON 20th MAY, 1990.

(C/5031)

## ★ Computer Courses ★

புதிய பிரிவுகள்: BASIC
19-05-1990 (Sat & Sun) 9.00 a.m.
D - BASE III +
19-05-1990 (Sat & Sun 3p.m.

**I.D.P. COMPUTER CENTRE**
342, K. K. S. Road,
Jaffna.

Branch: 7th Mile Post, Mallakam.

[சி-5036]

## ஈ.பி.ஆர்.எல்.எவ்- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அமைச்சரைப் பொறுத்தவரையில், ஐக்கியப்பட்ட இலங்கையின் கீழ் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். தமிழ்- சிங்கள மக்களிடையே அமைதி ஏற்பட வேண்டும் என்ற அக்கறையுடன் இருப்பதை நாம் அவதானிக்க முடிந்தது.

என்னைப் பொறுத்தவரையில் இன்று முக்கிய பிரச்சினையாக எமக்குள்ள தனிப்பட்ட பாதுகாப்புக் குறித்துக் கூட நாம் பேசவில்லை. ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களின் இனப் பிரச்சினை பற்றியே பேசினோம்.

அரசின் போக்கில் திருப்தியடைந்துள்ள நாம் வெகு விரைவில் 2 ஆம் கட்டப்பேச்சுக்களுக்கு நகர்வோம்- என்றார்.

ஜனாப் அபுயூசுப் கருத்து தெரிவிக்கையில்-எமது 19 அம்சக் கோரிக்கையைச் சர்வ கட்சி மாநாட்டில் ஆராய இணக்கம் காணப்பட்டுள்ளது என்றார். [அ-2-3]

# London Exams

## NOV / DEC - 90

| | ஆரம்பம்: |
|---|---|
| C. I. M. A - Stage I (London) | 2- 6- 1990 |
| I. D. P. M - part I (London) | 2- 6- 1990 |
| A. A: T. - Stage I (Sri Lanka) | 2- 6- 1990 |
| I. A. B (Book Keepers) | |
| Fouadation | 2- 6- 1990 |
| Inter | 9- 6- 1990 |
| Final | 9- 6- 1990 |

Basic, d Base III + Lotus 1, 2, 3
Word Processing பயிற்சிகள்
20 05- 1990 முதல் ஆரம்பமாகின்றன.

For Details:

**School of Business Administration**
(C. I. M. A. யினால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம்)
**16, 3rd Cross Street,**
[OLR தேவாலயம் மேற்குப்பக்கம்]
**Jaffna.**

[C/5034]

## ஈழப்பிரகடனம்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

19 அம்சக் கோரிக்கை சர்வ கட்சி மாநாட்டில் ஆலோசனைக்கு எடுக்கப்படும்.

★ சர்வ கட்சி மாநாட்டில் தொடர்ந்து தாம் பங்குபற்றுவதாக அமைப்பு உறுதியளித்தது இது சம்பந்தமாக இணக்கம் காணப்பட்டது.

இதே வேளை —

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சட்டம்-ஒழுங்கு பராமரிப்பு, வடக்கு - கிழக்கு மாகாண சபையின் உறுதியற்ற நிலைமை ஆகியன குறித்து ஈ. பி. ஆர். எல். எவ். தூதுக் குழு கவலை தெரிவித்ததாகவும் அறியவந்தது.

ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உறுதி பூண்டிருப்பதாகவும் ஈ. பி. ஆர். எல். எவ். குழு தெரிவித்ததாம்.

இது பற்றி அமைச்சர் விஜேரத்னா கருத்து வெளியிடுகையில், ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தின் 19 அம்சத் திட்டம் பற்றி விவாதித்து கருத்து உடன்பாடு காண சரியான இடம் சர்வகட்சி மாநாடு என்று தெரிவித்தார் எனவும் அறியவந்தது.

அதைத் தொடர்ந்தே சர்வ கட்சி மாநாட்டில் பங்குபற்றி இதுபற்றி பரிசீலனை செய்யும் அமைச்சரின் யோசனை குறித்து ஈ. பி. ஆர். எல். எவ். குழு இணக்கம் தெரிவித்தது எனவும் அறியவந்தது.

இருதரப்பு பேச்சுவார்த்தை நேற்றுக் காலை 10 மணிக்கு நாடாளுமன்றக் குழுக்கள் அறையில் நடைபெற்றது. ஒன்றரை மணித்தியாலங்கள் பேச்சு வார்த்தை நீடித்தது.

அரசு தரப்பில் பாதுகாப்பு துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேயரத்னாவும், ஜனாதிபதியின் ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோனும் கலந்து கொண்டனா.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே. பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ. பி. ஆர். எல். எவ். தூதுக்குழுவில் மாகாண சபை அமைச்சர்களான திரு. கிருபாகரன், ஜனாப் அபுயூசுப், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வி. யோகசங்கரி ஆகியோர் இடம் பெற்றனர்.

## நயினாதீவு ...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் படகுச் சேவை நடைபெறும்? வளர்ந்தவர்களிடமிருந்து 4 ரூபாவும் பிள்ளைகளிடமிருந்து 2 ரூபாவும் கட்டணமாக அறவிடப்படும்.

குறிகட்டுவான் இறுப்பிட்டி துறைகளுக்கு பிரதேச சபை குடிநீரை பௌசர்மூலம் வழங்கும். மின்சாரம், ஒலிபெருக்கி ஆகியவற்றை பொது நிறுவனங்கள் வழங்கும்.

கடல் விபத்துக்கள் ஏற்படும் பட்சத்தில் அவற்றை கவனிக்க விசேஷ படகுசேவையில் ஈடுபடுத்தப்படும்.

நயினாதீவு தொண்டர் படையினர், சென்யோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவினர் யாத்திரிகர்களை ஒழுங்காக ஏற்றியிறக்க உதவுவார்கள்.

நயினாதீவு கணேச வித்தியாலயம். மகாவித்தியாலய சாரணர்கள் கோவில் வீதிகளில் கடமைபுரிவார்கள்,

நயினாதீவு துறைமுகத் திருத்த வேலைகளை உடனடியாக ஆரம்பித்து விழா ஆரம்பமாவதற்கு முன்பூர்த்தி செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வழமைபோல் நயினாதீவு அன்னதான சபையினர் அன்னதானம் வழங்குவார்கள்.

சுங்கப்பகுதியினர் படகுச் சேவைகளைக் கண்காணிப்பார்கள். ஏதாவது நடைமுறைப் பிரச்சினைகள் ஏற்படும் பட்சத்தில் வேலணை உதவி அரசாங்க அதிபரும், மற்றும் அரசாங்க அதிகாரிகளும் அவற்றைத் தீர்க்க அவ்வப்போது நடவடிக்கைகளை எடுப்பார்கள்.

மேற்கண்டவாறு வேலணை மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. (இ-18)

## விஸ்கி பெட்டிக்குள் தங்கம்

கொழும்பு. மே 16

விஸ்கி இருந்த பெட்டிக்குள் வைத்துத் தங்கத்தைக் கடத்த முயன்ற விமானப் பயணி ஒருவருக்கு சுங்கத் திணைக்களம் ஒருலட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம்விதித்தது.

கைப்பற்றப்பட்ட தங்கத்தின் பெறுமதி ஐம்பதாயிரம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## கடற்படையிடம் பிடிபட்ட கடத்தல் படகு

கடத்தல் பொருள்களுடன் இந்தியாவில் இருந்து இலங்கை வந்த படகு ஒன்றை கடற்படை ரோந்துப் படகுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிடித்தன.

படகில் இருந்த நான்கு இந்தியர்களும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரும் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். (ஒ-எ)

## யாழ்.மினிவானில் கொள்ளை

கொழும்பு, மே 16

பருத்தித்துறை நோக்கி வந்து கொண்டிருந்த மினிவான் ஒன்று அனுராதபுரம் பகுதியில்நொச்சியாகம என்ற இடத்தில் வைத்து வழிமறிக்கப்பட்டுபயணிகளின்பொருள்கள் கொள்ளையிடப்பட்டன.

ஞாயிறு இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

இராணுவச் சீருடைஅணிந்திருந்த சிலரே இக்கொள்ளையை நடத்தினர் என்று கூறப்பட்டது.

வானில்இருந்தபயணிகளின் உடமைகள், நகைகள் கொள்ளையிடப்பட்டன.

சம்பவத்தின் போதுஉயிர்ச் சேதங்களோ, காயங்களோ பயணிகளுக்கு ஏற்படவில்லை.

பொலிஸார் விரைந்து சென்று விசாரணை நடத்தினர். (இ-எ)

## புலிகளுடன்- - -


(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமது கொள்கை - என்றார்.

அச்சமயம் சுதந்திர கட்சி உறுப்பினர்களை திருவாளர்கள் நிமால் சிறிபாலடி சில்வா வி. ஸி. குணரத்தின, ஆனந்த தசநாயக்கா ஆகியோர் உட்பட பல எம். பி. கள் கூச்சல் இட்டனர்.

ஒரு கட்டத்தில் அமைச்சர் ''இனிமேல் புலிகள் பற்றி கேள்வி கேட்டால் பதில் அளிக்க மாட்டேன்'' என்று கூறினார். (உ-2)

# நீங்களும் பஜாஜ் ஒன்றை வாங்கலாம்.




விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்திற்கு இலகுவாகப் பயணம் செய்ய நவீன காலத்திற்கு உகந்த வாகனம்......பஜாஜ். நீங்களும் இந்த அற்புதமான பஜாஜ் வாகனம் ஒன்றைச் சொந்தமாக வாங்கி மாதாமாதம் நல்ல இலாபம் சம்பாதிக்க இதுவே சிறந்த வாய்ப்பு.

றிச்சர்ட் பீரிஸ் நிறுவனமும் வங்கிச் சேவையும் இணைந்து வகுத்திருக்கும் சுயதொழில் வாய்ப்பு ஆதாரத் திட்டத்தின் கீழ் பஜாஜ் வாகனம் ஒன்றை வாங்குங்கள். சாரதி அனுமதிப் பத்திரம் கொண்டுள்ள 21 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் பஜாஜ் வாகனத்தின் விலையில் 60 சதவீதம் கடனுக வழங்கப்படும்.

எனவே, குறைந்தபட்சம் உங்களுக்கு ரு 35,000 செலவிட முடியுமானல் புத்தம் புதிய பஜாஜ் வாகனம் ஒன்றை உரிமையாக்கிக் கொள்ள முடியும். கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு 4 வருடகால அவகாசம் வழங்கப்படும்

பஜாஜ் வாகனம் உங்கள் தொழிலுக்கு மட்டுமல்ல உங்கள் குடும்பத்தினரின் தனிப்பட்ட பயணங்களுக்கும் உகந்தது.

சந்தை... பாடசாலை... கோவில்... உறவினர் இல்லம் ... இப்படி எங்கு வேண்டுமானலும் பஜாஜில் உல்லாசமாகச் சவாரி செய்யலாம்.

இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி பஜாஜ் ஒன்றை வாங்குங்கள். நிச்சயமாக நீங்கள் நன்மையடைவீர்கள்.

**றிச்சர்ட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமிட்டெட்**
60, ஹைட்பார்க் கோர்னர்
கொழும்பு 2
தொலைபேசி: 25701/2, 422149, 549480




**பஜாஜ் பயணம் கோடி பெறும்**

## ஓராண்டு நினைவஞ்சலி



திரு. செல்லையா சிதம்பரநாதர்

அன்னை மடியில்:
26 - 05 - 1927

ஆண்டவன் அடியில்:
27 - 05 - 1989

திதி:-16-05-1990

அம்மாவை இழந்த துயர் ஆற
எமை சேறுவித்த -பெம்மானே
எங்கள் பெருமானே, அப்பா
எனும் மொழிக்கு ஒப்பாக
ஓர் மொழியை எப்போ நாம்
காண்போம் ஏங்குகின்றோம்
உங்கள் ஆன்ம சாந்திக்காக
இறைவனை வேண்டு கிறோம்.

**பிள்ளைகள்.**

பலாலி கிழக்கு,
பலாலி. (3575)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது

**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**

★ தரமான வர்ண நிழற்படபிரதி ஒன்று 3R/PC - 6/30, 5/90, 5/50
★ விநியோகம் ஒரு வாரம் [7 Days]
★ விற்பனை - வர்ண நிழற்படச் சுருள்கள்

பெற்றுக்கொள்ள நாடுங்கள்.



# உதயன்

16 - 05 - 1990 புதன்கிழமை



எம்மிடம் வர்ண நிழற்பட பிரதிகள், பிரதியாக்கம் செய்பவர்களுக்கு பட அல்பங்கள், படச்சுருள்கள் இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு:

**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**

111, கஸ்தூரியார் வீதி

யாழ்ப்பாணம்.,


## மரண அறிவித்தல்கள்

### திரு. V. M. சண்முகம்

யாழ்ப்பாணம், கொழும்பு பிரபல வர்த்தகர் திரு V. M. சண்முகம் அவர்கள் 13-05-90 இல் காலமானார்.

இவர் காரைநகர் சம்பந்தர் கண்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற விநாசித்தம்பி முருகேசு, சுந்தரம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், V. M. சண்முகம் அன்ட் பிறதர் (85, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், 74, பழைய சோனக தெரு, கொழும்பு) நிறுவன உரிமையாளரும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புக் கணவரும், சுணேசமூர்த்தியின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற V. M. பரமநாதன் (உரிமையாளர் V. M. பரமநாதன் அன்ட் சன்ஸ், யாழ்ப்பாணம், கொழும்பு), திருமதி பொன்னம்மா வேலுப்பிள்ளை, V. M. கந்தையா (இளைப்பாறிய வருமான வரி மதிப்பீட்டாளர், உரிமையாளர் வி. முருகேசு ஸ்ரோஸ், யாழ்ப்பாணம்), V. M. பேரம்பலம் (சாட்டட் அக்கவுண்டன் அவுஸ்திரேலியா) உரிமையாளர் V. M. பேரம்பலம் அன்ட் கோ, சாட்டட் அக்கவுண்டன்ஸ் யாழ்ப்பாணம், கொழும்பு), திருமதி செல்லம்மா யோகரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 16-5-90 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் காரைநகர் சம்பந்தர் கண்டி இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்:
V. M. P. முருகேசு

சம்பந்தர்கண்டி,
காரைநகர். (3574)

### சிவத்திரு. க. சி. பாலசுப்பிரமணிய குருக்கள்

திருநெல்வேலி முத்துமாரியம்மன் தேவஸ்தான ஆதீன கர்த்தாவும் பிரதமகுருவும், நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்க கிளை முன்னாள் முகாமையாளரும் ஆகிய பாலசுப்பிரமணிய குருக்கள் சிவபதமடைந்து விட்டார். அன்னாரின் ஈமக்கிரியை 16-5-90 புதன்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
முத்துமாரியம்மன் கோவில்
தேவஸ்தானத்தினரும்
திருமதி பாலசுப்பிரமணிய
குருக்கள்
மகன் துளசி

முத்துமாரியம்மன் கோவிலடி,
திருநெல்வேலி. (13099)

### திருமதி மகேஸ்வரி விநாயகமூர்த்தி

புங்குடுதீவு 4-ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி விநாயகமூர்த்தி 14-05-1990 திங்கட்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற குருமூர்த்தி விநாயகமூர்த்தியின் அன்பு மனைவியும், பேராசிரியர் வி. சிவசாமி [யாழ். பல்கலைக் கழகம்], திருமதி ம. விசாலாட்சி [ஆசிரியை], செல்வி வி. பூமணி [கலாச்சார உத்தியோகத்தர்], திருமதி ச. சரோஜினிதேவி [ப. நோ. கூ. சங்கம், புங்குடுதீவு] ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. இ. மகேஸ்வரன் [அஸ்பெஸ்டஸ் லிமிட்டெட்], திரு. கா. சண்முகநாதன் ஆகியோரின் மாமியாரும், ம. பிரதீபன், ச. விநோதன், ச. தேவரஞ்சினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 16-05-1990 புதன்கிழமை காலை 10 மணிக்கு சேரதீவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வி. சிவசாமி

4-ம் வட்டாரம்,
புங்குடுதீவு. (3578)

### செல்வி தனலெட்சுமி குலசிங்கம்

[பழைய மாணவி, யாழ்./கன்னியாஸ்த்திரியர் மடம்]

செல்வி தனலெட்சுமி குலசிங்கம் காலமானார்.

இவர் குலசிங்கம் தேவராணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், கிருஷ்ணகுமார் (ஜேர்மனி), விஜயலெட்சுமி, செல்வகுமார் (மாணவன், சென். பற்றிக்ஸ் கல்லூரி), உதயலெட்சுமி, குலராணி, ஜெயலெட்சுமி (யாழ் / இந்து மகளிர் கல்லூரி), ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சத்தியராணியின் அன்புப் பெறாமகளுமாவார்.

ஈமக்கிரியைகள் 16-05-1990 இன்று காலை 10-00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
க. குலசிங்கம் தம்பதியர்

358, K.K S. வீதி,
யாழ்ப்பாணம். [3577]

# சிகிரியா காட்டுப் பகுதியில் 128 இளைஞர் கைதாகினர்

கொழும்பு, மே 16

சிகிரியா, தம்புள்ளை, குமாரகந்த பகுதியில் 128 இளைஞர்கள் கடந்த இரு நாட்களில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ஜே. வி. பி. இயக்கத்தைச் சாராத வேறு அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று அரசு தெரிவித்துள்ளது.

விசேட பொலீஸ் பிரிவினர் கடந்த இரு நாட்களாக சிகிரியாக் கொள்ளை தொடர்பாக மூன்று கிராமங்களைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடாத்தினார்கள்.

தாக்குதல் சம்பவத்துடன் 4 மறைவிடங்களையும் கண்டுபிடித்த படையினர், கொள்ளையுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கருதப்படும் 128 பேரைக் கைது செய்தனர்.

கடந்த வாரம் நடந்த தாக்குதலின் போது தப்பிய 20 பேரும் இந்தத் தேடுதலில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இவர்கள் ஜே. வி. பி. இயக்கத்தைச் சாராதவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-2-3)

## இன்று மெய்வல்லுநர் போட்டி

முல்லைத்தீவு, மே 16

முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்பு இந்து வித்தியாலய இல்லங்களுக்கான மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு. மூ. குகதாசன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக முல்லை. மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். எஸ் மனோகரன் கலந்து கொள்வார். (க-92)

## சிகை அலங்கரிப்பாளர் பொதுக்கூட்டம்

குருநகர், மே 16

வடஇலங்கை சிகைஅலங்கரிப்பாளர் சங்கத்தின் முக்கிய பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு யாழ் மனோசரா திரையரங்கில் நடைபெறும்.

சங்கத்தின் எதிர்கால அபிவிருத்தி, புதிய நிர்வாகிகள் தெரிவு சம்பந்தமானதாக இன்றையகூட்டம் அமையுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-51)

## மீண்டும் வீதி ரோந்து

கொழும்பு, மே 16

மீண்டும் வீதி ரோந்துப் பணியை ஆரம்பிக்கும்படி சகல மாவட்ட பொலீஸ் அதிபர்களையும் பொலீஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா பணித்திருக்கிறார்.

இப் பணி கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருந்தது. வழிபறிக்கொள்ளைகள் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தவே இந் நடவடிக்கை எடுக்கப்படுவதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. [ப-எ]

## அலரிக்காய் சாப்பிட்டு இருவர் மரணம்

யாழ்ப்பாணம், மே 16

குடாநாட்டில் அலரிக்காய் சாப்பிட்டு தற்கொலை செய்து கொள்வோர் எண்ணிக்கைஅதிகரித்து வருகிறது.

வயிற்றுக் குத்து நோயால் அவஸ்தைப்பட்ட இளம் பெண் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த இந்தச் சம்பவத்தில் மரணமானவர் காரைநகர் மடத்தடி வளவைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை புவனேஸ்வரி [வயது 14] என்பவர் ஆவார்.

வெளிநாடு செல்வதாகக் கூறிச் சென்ற தமது கணவர் 6 மாதங்களாகியும் வராததால் விரக்தியடைந்த இளம் பெண் ஒருவரும் அலரிக்காய் சாப்பிட்டுதற்கொலை செய்து கொண்டார்.

மரணமானவர் யோகலிங்கம் கலாதேவி [வயது 23] என்னும் இரண்டு பிள்ளைகளின் தாயாவார்.

இந்தச் சம்பவம் [illegible] பாய், கட்டுடைப் பகுதியில் நேற்று நடைபெற்றது. (ஒ-10)

# வடக்கு-கிழக்கு எம்.பிக்களுக்கு பொலீஸ்- ராணுவ பாதுகாப்பு

கொழும்பு, மே 16

வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம் எம்பிக்களுக்கு இராணுவ பொலீஸ் பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கை கடந்த ஞாயிறு முதல் ஆரம்பமாகியது.

இந்த எம்பிக்கள் வெளியே செல்லும் போதும் அவர்களின் வீடுகளிலும் ஆயுதம் தரித்த இராணுவத்தினரும் பொலீஸாரும் பாதுகாப்பு வழங்குவர்.

அரசுடன் நேற்று ஆரம்பமான அரசு ஈ. பி. ஆர் எல். எவ். பேச்சுக்களில் கலந்து கொள்வதற்காக ஈ. பி. ஆர். எல். எவ். எம்பிதிரு, பிரேமச்சந்திரன் புதுடில்லியில் இருந்து திரும்பிய போது அவருக்குப் பொலீஸாரும் இராணுவத்தினரும் கட்டுநாயாக்காவில் இருந்து பாதுகாப்பு வழங்கினர். (இ-எ)

## யாழ். மத்திய தபாலகத்தில் கூடுதல் முத்திரைகளை இருப்பில் வைக்க முடியாத நிலை ஏன்?

யாழ்ப்பாணம், மே 16

யாழ் மத்திய தபாலகத்தில் இரும்புப் பெட்டகம் சேதமடைந்ததால்கூடுதலான அளவு முத்திரைகளை வைப்பில் வைக்க முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்பு இரும்புப் பெட்டகம் இருந்தபோது மூன்று லட்சம் ரூபா பெறுமதியான முத்திரைகள் வைப்பில்வைக்க முடிந்தது.

ஆனால் தற்சமயம் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான முத்திரைகளே வைப்பில் வைக்கப்படுகின்றன.

இதனால் முத்திரைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படுகின்றது என்றும் தாம் மேற்கொள்ளும் விசேஷ ஏற்பாட்டால் ஓரளவு முத்திரைத் தட்டுப்பாடு தவிர்க்கப்படுகின்றது. என்றும் தபால் திணைக்கள அதிகாரி தெரிவித்தார். [இ-3]

## வெளியிடங்களுக்கான தபால் 5.15 வரை சேர்ப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மே 16

வெளியிடங்களுக்கான கடிதங்களை யாழ் மத்திய தபால் நிலையத்தில் மாலை 5.15 க்கு சேர்ப்பித்தால் மறுநாள் அந்த அந்த இடங்களில் கிடைக்கும்.

யாழ் - மத்திய தபால் நிலையத்தில் சேர்ப்பிக்கப்படும் கடிதங்கள் மாலை 5.15 மணிக்கு கட்டுக்கு எடுக்கப்பட்டு, மாலை ரயில் மூலம் அனுப்பப்படும் என்று தபால் நிலைய அதிகாரி தெரிவித்தார்.

அந்த நேரத்துக்கு பின் சேர்ப்பிக்கப்படும் கடிதங்கள் மறுநாளே அனுப்பப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ 3)

## வடக்கு-கிழக்கு ஆசிரியருக்கு அடையாள கார்ட் வழங்க கோரிக்கை

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் சகல ஆசிரியர்களுக்கும் உத்தியோக ரீதியில் அடையாளக் கார்ட் வழங்கும்படி மாகாண கல்வி அமைச்சை இலங்கை பட்டதாரி ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

ஆசிரியர்களது பாதுகாப்புக்கு இத்திட்டம் உதவும் என இச்சங்கம் கருத்து தெரிவிக்கிறது. (ப-எ)

## நாடாளுமன்றத்தில்- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் நீதிமன்றங்களைப் பகிரங்கமாக நடத்துகிறார்கள்.

பொருள்களுக்கு அவர்கள் வரிவிதிப்பதால் விலையேற்றம் ஏற்பட்டுள்ளது.

சிங்களப் பொலீஸாரைப் பலாத்காரமாக வெளியேற்றுகிறார்கள். கடைசிச் சிங்களப் பொலீசாரும் அங்கிருந்து அனுப்பப்பட்டுவிட்டார்.

இந்த நடவடிக்கைகள் யாவற்றையும் அரசு-புலிகள் பேச்சுவார்த்தை நடத்திய பின்புதான் விடுதலைப் புலிகள் பயமின்றி, பகிரங்கமாகச் செய்துவருகிறார்கள்.

அரசுக்கும் புலிகளுக்கும் ஏற்பட்டுள்ள இரகசிய ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயேஇது நடக்கிறது என்று பிரசாரம் நடக்கிறது. இரகசிய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதா? புலிகளின் நடவடிக்கைகளுக்கு எதிராக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? இதைப் பாதுகாப்பு அமைச்சர் விளக்கவேண்டும் - என்றார்.

இதற்கு துணை அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினா பதில் அளித்துக்கொண்டு இருக்கும் போது சுதந்திரக்கட்சி எம். பிக்கள், துணைஅமைச்சர் [illegible] டாயம் பதில் அளிக்கவேண் [illegible] முயல்கிறார்' என்று கூச்சல் இட்டனர்.

'சுதந்திரக்கட்சி இந்த நாடு சீரழிவதைப் பார்க்க விரும்புகிறது' என்று அமைச்சர் கூற எதிர்க்கட்சி எம். பிக்கள் மீண்டும் கூச்சல் இட்டனர்.

அச்சமயம் சதிகாரர்கள் போல வந்து கூச்சல் போடுகிறீர்களே என்று அமைச்சர் கூற, சுதந்திரக்கட்சி எம்.பிக்கள் கூச்சல் இட்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோஷமிட்டனர்.

மீண்டும் அமைச்சருக்கும் திரு. நிமால் சிறிபால டி. சில்வாவுக்கும் இடையில்ஐந்து நிமிடம் வாக்குவாதம் இடம் பெற்றது.

துணைஅமைச்சர் ரஞ்சன் பாவித்த சதிகாரர்கள் என்ற சொல்லை வாபஸ்பெறும்படி சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் சத்தமிட்டுக் கேட்டனர்.

சத்தமிடல் மீண்டும் கூச்சலாக மாறியபோது, சபாநாயகர் சபையை நாளை வரை ஒத்திவைத்தார்.

## சிறிமா யூகோ. பயணம்

கொழும்பு, மே 16

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா வைத்திய சிகிச்சை பெறுவதற்காக யூகோஸ்லேவியாவுக்கு பயணமானார். [ப-எ]

# போராளி நவம் நினைவாக நேற்று அஞ்சலி நிகழ்ச்சிகள்

நெடுங்கேணி, மே 16

நெடுங்கேணியில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த விடுதலைப் புலிகளின் முல்லைத்தீவு மாவட்ட பொறுப்பாளராக இருந்த லெப்டினன்ட் கேர்ணல் நவத்தின் [டடி] முதலாம் வருட நினைவாக நேற்று அஞ்சலி நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நெடுங்கேணியில் வீதிகளிலும் வர்த்தக நிலையங்கள், அரச அலுவலகங்கள் முன்னாலும் வாழை மரங்களும் மாவிலைதோரணங்களும் கட்டப்பட்டு இருந்தன.

டடியின் உருவப் படங்கள் வைக்கப்பட்டு குத்து விளக்கும் ஏற்றி வைக்கப்பட்டிருந்தன. சோக கீதமும் ஒலித்தது.

கிராமப் பகுதிகளான மருதோடை, பட்டிக்குடியிருப்பு பகுதிகளிலும் அஞ்சலி நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதேபோன்று புதுக்குடியிருப்பு, கொக்குத்தொடுவாய் கருநாட்டுக்கேணி, கொக்கிளாய் பகுதிகளிலும் சிறப்பான அஞ்சலி நிகழ்ச்சிகள் நேற்று நடைபெற்றன. [ஒ-108-126-113]

## ஈ.பி.ஆர்.எல்.எவ் - அரசு பேச்சு--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் ஈடுபட்டனர்.

அப்பாவிகளான முஸ்லீம் நிசேர்வ் பொலீஸாரை வெட்டிக் கொன்று அதன் மூலம் தமிழ் — முஸ்லீம் கலவரங்களை உருவாக்க முயன்றதும்-

எல்லைப் புறங்களில் உள்ள சிங்கள மக்களையும் மற்றும் சிங்களப் படையினரையும் கொன்று சிங்கள — தமிழ் கலவரங்களை உருவாக்கி அதன் மூலம் காலம் காலமாக இந்திய ஆக்கிரமிப்புப் படையை இத் தீவில் இருத்துவதற்கு ஈ. பி. ஆர். எல். எவ்வினர் எடுத்த முயற்சிகளையும் ஸ்ரீ லங்கா அரசு நன்கு அறிந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இன்று அவ்விதம் அந்நிய ஆக்கிரமிப்புச் சக்தி ஒன்றுக்கு இத்தீவை அடகு வைக்க முயன்ற ஒரு தேச விரோதக் கும்பலுடன் ஸ்ரீ லங்கா அரசு பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது தமிழ்மக்களை மட்டுமல்ல, சிங்கள மக்களையும் அவமதிக்கும் செயலாகவே கருதவேண்டியுள்ளது.

இப்பேச்சுவார்த்தை தமிழ் பேசும் மக்களின் நலன்களிற்காக நடத்தப்படவில்லை. இப்பேச்சுவார்த்தையின் நோக்கங்களும் விளைவுகளும் தமிழ்ப் பேசும் மக்களுக்கு விரோதமானதாக அமையும் என்பதனால் தமிழ்ப் பேசும் மக்கள் சார்பில் இப்பேச்சுவார்த்தைக்கு எமது ஆட்சேபனையைத் தெரிவிக்கின்றோம். (உ-9)


## அறிவித்தல்

எம்மிடம் றைக்கிளீன் செய்து பெற்றுச் சென்ற (பில் இல:- 3964) உடைகளுக்குரிய S. இராஜேந்திரம், வண்ணார் பண்ணை என்பவரை உடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

நிர்வாகி
**சன்லைட் றைக்கிளீனேர்ஸ்**
யாழ்ப்பாணம்.

(C/5038)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சாரதாம்பாள் சிவசர்மா

காரைநகர் மணற்காட்டைச் சேர்ந்த திருமதி சாரதாம்பாள் சிவசர்மா சிவபதமடைந்தார். இவர் சோமசுந்தர ஐயர் சிவசர்மாவின் அன்பு மனைவியும், ஜெகதீஸ்வரி, பாலச்சந்திரன் (மலேசியா), சிவனேஸ்வரி, கமலநாதன் (உரிமையாளர் சிவதர்ஷன், யாழ்ப்பாணம்), லலிதாம்பாள் இவர்களின் அன்புத்தாயாரும், இராமகிருஷ்ணசர்மா (நொதேண் இன்டஸ்றீஸ் யாழ்ப்பாணம்), ஸ்ரீபதி (சமூக சேவைக்கிளை கச்சேரி யாழ்ப்பாணம்), சபாரட்ணசர்மா, பிரபா, ஹேமா ஆகியோரின் அன்பு மாமியாரும், சசிகலா (சுவிர்ஸ்சலாந்து) சசிதரன், முரளிதரன், சசிரேகா, தாரிணி, சுகன்யா ஸ்ரீஜெயபவன், சோபனா திவ்யா ஆகியோரின் அன்புப் பேத்தியும், தேவப்பிரகாஷ், அருண் பிரசாத் (சுவிர்ஸ்சலாந்து) ஆகியோரின் பூட்டியும் ஆவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் காரைநகர் மணற்காட்டிலுள்ள அவரது இல்லத்தில் 16 – 5 – 90 ஆம் திகதி புதன் மாலை 3.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியை காரைநகர் சாம்பலோடை மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
சிவசர்மா கமலநாதன்.
(மகன்)

காரைநகர். (13201)

### திருமதி கந்தையா அழகம்மா

யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த திருமதி கந்தையா அழகம்மா காலமானார்.

இவர் கந்தையாவின் அன்பு மனைவியும், பேரம்பலம் (சவுதி), சுந்தரலிங்கம் (ஈராக்), சந்திரபாலா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், மருமகள் இந்திராணி, பேரப்பிள்ளைகள் சாருகேசி (நோர்வே), தயாளன் (நோர்வே), சூட்டி, ஈசன், உதயன், நவா, மருமகள் கமலாம்பிகை, பேரப்பிள்ளைகள் முரளி, ரமணன், உதயனன், தமிழினி, சங்கீத், அஜித். சங்கிதினி, கரிகரன் ஆகியோரின் மாமியாரும், பேத்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 17-05-1990 வியாழனன்று பிற்பகல் 4 மணியளவில் துண்டி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
திருமதி பேரம்பலம்

11/1, புது வீதி,
கொய்யாத்தோட்டம்.
யாழ்ப்பாணம். [13100]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 16-05-1990இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org